# அரசு ஊழியர்

பிப்ரவரிவரி 2018

மலர் : 39 இதழ் : 2

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்திற்காக
அச்சிட்டு வெளியிடுபவர் : மு.அன்பரசு

ஆசிரியர் : மு.சுப்பிரமணியன்

ஆசிரியர் குழு

மு.அன்பரசு, எம்.தங்கராஜ், ந.குமாரவேல்,
மொ.ஞானத்தம்பி, இரா.பன்னீர்செல்வம்,
எஸ்.தமிழ்ச்செல்வி, என்.ஜனார்த்தனன், தி.கலைசெல்வி

முகவரி : பழைய எண். 48
புதிய எண் 46, தேரடித் தெரு
திருவல்லிக்கேணி, சென்னை – 600 005.
e-mail : arasuoozhiyar@gmail.com

*அச்சகம்: சென்னை ஆப்செட் பிரிண்டர்ஸ்,*
*19/1 & 21/2, கிட்டாபாத் கான் பகதூர் தெரு,*
*எல்லீஸ் ரோடு, அண்ணாசாலை, சென்னை - 600 002.*

*ஆண்டுச் சந்தா : ரூ. 80 தனி இதழ் ரூ. 8*


**சூடாக ஒரு கோப்பை சூப்**

## புலிஎனச் செயல் செய்ய புறப்படு!

பூட்டிய இரும்புக் கூட்டின்
கதவு திறக்கப்பட்டது,
சிறுத்தையே வெளியில் வா!
எலிஎன உன்னை
இகழ்ந்தவர் நடுங்க
புலிஎனச் செயல் செய்ய
புறப்படு வெளியில்!
நம்பினை பகலினை
நல்லிருள் என்றே!
சிம்புட் பறவையே,
சிறகை விரி எழு!
சிங்க இளைஞனே,
திரும்ப முகம், திற விழி!

# அரசின் ஏமாற்று நாடகம் மீண்டும் வரலாறு படைக்க தயாராவோம்

ஆட்சியாளர்களின் கொள்கைகளால் உருவாக்கப்பட்ட புதிய பென்சன் திட்டம் உட்பட பல தாக்குதல்களை எதிர்த்து நாம் தொடர்ந்து களம் கண்டு வருகிறோம். அரசு ஊழியர் ஆசிரியர்களின் ஊதிய மாற்றம் ஜாக்டோ-ஜியோ எனும் பேரமைப்பால் வென்றெடுக்கப்பட்டது. ஆனால் நமது மிகபெரிய கோரிக்கையான புதிய பென்சன் திட்டத்தை ரத்து செய்வது குறித்து அரசின் மௌனம் இன்னும் களையவில்லை என்று தெரிவிக்கிறது.

அரசு ஊழியர்களையும் ஆசிரியர்களையும் ஏமாற்றுவதற்குதான் "புதிய பென்சன் ரத்து செய்வது" குறித்து அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் தொடர் நீட்டிப்பு 6.9.2017ல் ஈரோட்டில் மாண்புமிகு தமிழக முதல்வருடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையில் 30.11.2017க்கு முன்னர் எக்காரணம் கொண்டும் நீட்டிக்கப்படாது என்ற உறுதியான முடிவை நீட்டிப்பதன் மூலம் மீறி விட்டார்கள்.

மதுரையில் நடந்த உயர்நீதிமன்றத்தில் "நீதிபதி" அவர்களின் கேள்விக்கு 30-11-2017க்குபின் குழுவின் அறிக்கை பெறப்பட்டு முடிவு செய்யப்படும் என்ற அரசின் நீதிமன்ற உறுதி மொழியையும் மீறிவிட்டார்கள்.

இந்த நிலையில் இன்றைய தமிழக அரசு வழக்கமாக போராடும் அனைவரையும் மிரட்டுவதும், அச்சிறுத்துவதும் என்ற போக்கினை கொண்டுள்ளது. போராடும் வர்க்கத்தினரின் வாழ்வாதார பாதுகாப்பை கேள்விக்குள்ளாக்குவது பெரும் இன்னல் தரக்கூடிய நடவடிக்கைகளையும் செய்து வருகிறது. இது ஆரோக்கியமான போக்காக தெரியவில்லை. சங்கம் அமைப்பதும் உரிமைக்கான போராட்டங்கள் நடத்துவதும் அன்றாட பணிகளில் ஒன்றாகிவிட்டது.

போராடுபவர்களின் உரிமைகளைப்பற்றி கொண்டுள்ள கவனம் கொஞ்சமும் கவலைப்படாமல் நீதிமன்றங்களும் அரசின் அடக்குமுறை கருவி என்பது தொடர்ந்து நிருபிக்கப்பட்டுவிட்டது.

ஏதோ ஊதிய மாற்றம் செய்து விட்டதே ஒரு பெரிய அறிவிப்பாக செய்து வரும் அரசு, அரசு ஊழியர்கள் ஆசிரியர்களின் நிலுவைக் கோரிக்கைகளை நிறைவேற்ற மறுத்து வருவது இனியும் ஏற்கத்தக்கதல்ல. ஆளுநரின் அறிக்கையில் ஊதிய முரண்பாடு களைய குழு அமைக்கப்படும் எனத் தெரிவித்திருப்பது ஒரு கண் துடைப்பே. போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தியுள்ளது மக்கள் மத்தியில் தவறாக கொண்டு செல்வதற்கே. எனவே அரசின் மௌனத்தை களைய வைக்க களம் இறங்குவதே சரியானதாகும்.

அரசுக்கு புரியும் மொழி போராட்டம்தான். "புதிய பென்சன் திட்டம் குழு" தள்ளிப்போடுவது மற்ற கோரிக்கைகளுக்குமான அரசின் ஏமாற்று நாடகமே. அரசின் ஏமாற்று நாடகத்தை அம்பலப்படுத்துவதே தற்போது நமது கடமையாகும். நமது உரிமைகளை மீட்டெடுக்க மீண்டும் போராட்ட வரலாறு படைப்பதே சரியாகும். அதற்காக ஜாக்டோஜியோ களம் இறங்க தயாராவோம். ❖

# காகிதக் கப்பலில் ஒரு சாகசப் பயணம்

## குழம்பிய குட்டை

தமிழக முதல்வராய் இருந்த செல்வி.ஜெ.ஜெயலலிதா அவர்கள் உடல்நலக் குறைவினால் கடந்த செப்டம்பர் 22, 2016 அன்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதிலிருந்து இன்று வரை தமிழகத்தில் அரசு நிர்வாகம் செயல்படுவதாய் தெரியவில்லை. மருத்துவமனையில் ஜெயலலிதா அனுமதிக்கப்பட்ட சில நாட்களிலேயே மத்திய பாஜக அரசின் சூட்சும கயிறுக்குள் அதிமுக-வின் பொம்மை நிர்வாகம் வந்துவிட்டது. நாடு முழுக்க ஒரே வரி என்ற பெயரில் மாநிலங்களின் வரி விதிப்பு அதிகாரத்தை பறித்து, மாநிலங்களின் பொருளாதார இறையாண்மையை சிதைக்கும் “பொது சரக்கு மற்றும் சேவை வரியை” கொண்டு வரும் முனைப்பில் மோடி அரசு இருந்தபோது, அதைக் கடுமையாக எதிர்த்தவர் ஜெயலலிதா. அது மட்டுமின்றி, “மருத்துவப் பொது நுழைவுத் தேர்வை” (நீட்) ஒரு சமூக அநீதி என்று சாடியவர் அவர். கல்வி மாநிலங்களின் பட்டியலுக்குள் மீண்டும் வர வேண்டும் என்று குரல் கொடுத்தார். உதய் மின் திட்டம், பொது விநியோக திட்டத்தில் மத்திய அரசு கொண்டு வந்த மாற்றங்கள் மற்றும் உணவு பொருட்கள் ஒதுக்கீடு குறைப்பு முதலியவற்றையும் கடுமையாக எதிர்த்தார். ஜெயலலிதாவின் மறைவிற்கு பின், அதிகாரப் போட்டியில் தங்களுடைய பதவிக்காக அடுத்தடுத்து மாநிலங்களின் உரிமைகளை இப்போதைய ஆட்சியாளர்கள் மத்திய அரசிடம் பணயம் வைத்து வருகின்றனர். மாநிலத்தில் பெரும்பான்மை பலம் பெற்று இருந்தது மட்டுமின்றி, மக்களவையில் 37 உறுப்பினர்களுடன் நாட்டின் மூன்றாவது பெரிய கட்சியாக இருக்கும் அதிமுக அரசிற்கு, ஒட்டுமொத்த எதிர்க்கட்சிகளும், மக்களும் ‘நீட்’ தேர்வு விவகாரத்தில் துணைநின்றபோதும், மத்திய-மாநில அரசுகள் வெற்று வாக்குறுதிகளை தந்து, இறுதியில் நீதிமன்ற உத்தரவு என கைகழுவி விட்டன. மேலும், காவிரி நதி நீர் பங்கீட்டு வழக்கில் உச்ச நீதிமன்றம் உத்தரவிற்கு பல ஆண்டுகள் ஆனபோதும், காவிரி நதி நீர் ஆணையத்தின் தீர்ப்பின்படி தமிழகத்திற்கு நியாயமாக தர வேண்டிய பங்கினை தர மறுதலிக்கும் கர்நாடக அரசினை, அரசியல் இலாபம் கருதி கண்டிக்காமல் மௌனம் காக்கிறது மத்திய அரசு. வருமான வரித்துறை, ஊழல் கண்காணிப்புத் துறை, மத்திய புலனாய்வுத் துறை உள்ளிட்ட அரசின் கட்டுப்பாட்டில் உள்ள அமைப்புகளை, தமிழக அமைச்சர்களுக்கு எதிராக செயல்பட வைத்து, மிரட்டி தனது உத்தரவுகளுக்கு அடிபணிய வைத்து வருகிறது மத்திய அரசு. ஜெயலலிதா மரணம், அடுத்த கட்ட ஆட்சி மாற்றம், சசிகலா பொதுச் செயலாளராக பதவியேற்பு, பன்னீர் செல்வத்தின் முதல்வர் பதவி பறிப்பு, அதற்கெதிராக தர்ம யுத்தம், ஊழல் வழக்கில் சசிகலா சிறையிலடைப்பு, எடப்பாடி முதல்வராக பதவியேற்பு, நம்பிக்கை இல்லாத் தீர்மானம் தோல்வி, ஓபிஎஸ் மற்றும் இபிஎஸ் அணிகள் இணைப்பு, தினகரன் அணியினர் தகுதி நீக்கம், ஆர்.கே.நகர் இடைத் தேர்தலில் சுயேச்சையாக போட்டியிட்டு தினகரன் வெற்றி என அதிகாரப் போட்டியின் விளைவாக ஒவ்வொரு நாளும் ஆட்சி அதிகாரத்தை தக்க வைத்துக் கொள்ளவே ஆளுங் கட்சியினருக்கு நேரம் சரியாக இருக்கிறது. இந்நிலையில், விவசாயிகள் தற்கொலை, வறட்சி நிவாரணம், குடிநீர் பிரச்சனை, டெங்கு காய்ச்சல், அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள், செவிலியர்கள், போக்குவரத்து ஊழியர்கள் பிரச்சனை உள்ளிட்ட பிரச்சனைகளுக்கு உரிய தீர்வு எட்டாப்படாமல் இருக்கிறது.

2017 ஜனவரியில் நடைபெற்ற ஜல்லிக்கட்டு போராட்டம் நாட்டின் பல்வேறு பகுதிகள் மட்டுமின்றி உலகளவிலும் தமிழகத்தை திரும்பிப் பார்க்க வைத்தது. போராட்டத்தின் உள்ளடக்கம் ஜல்லிக்கட்டாக இருந்தாலும், அதன் வெளிப்பாடு ஆட்சியாளர்களுக்கும், அதிகாரத்துக்கும் எதிரான துணிச்சலான அறைகூவல். ஆட்சியாளர்களுக்கு எரிச்சலூட்டிய போராட்டம், ஜனவரி 26 நெருங்கிய சூழலில் மாணவர்களின் கோரிக்கைக்கு மத்திய, மாநில அரசுகள் அடிபணியும் நிலை ஏற்பட்டது. ஜல்லிக்கட்டு தொடர்வதற்கேற்ப சட்டப் பேரவையில் அவசரச் சட்டத்தை கொண்டு வந்ததோடு, போராட்டத்தை கலைக்க இரு அரசுகளும் முடிவெடுத்தன. ஏனெனில், ஒரு குறிப்பிட்ட முழக்கத்தோடு துவங்கும் போராட்டம், அந்த முழக்கத்தை தாண்டி அமைப்பையே புரட்டி போடும் புரட்சியாக உருவெடுப்பது வரலாற்றில் பலமுறை நடந்திருக்கிறது. எனவே, இது நிகழாமல் தடுக்க ஆட்சியாளர்கள், காவல் துறை மூலம் மாணவர்களின் மீது வன்முறையை கட்டவிழ்த்து விட்டது. தேசிய ஊடகங்களில் மாணவர்கள் போராட்டத்திற்கு அன்று



*கிடைக்காத முக்கியத்துவம், இன்று வன்முறைக்கு கிடைத்தது, அமைப்பின் நோக்கத்தை தெளிவாக உணர்த்தியது. பல பரிமாணங்கள் கொண்ட இந்தப் போராட்டம், அமைதியாக முடிந்திருந்தால், அதன் தொடர்ச்சியாக பல்வேறு கோரிக்கைகளை தேசம் இன்றைக்கும் விவாதித்திருக்கும். அப்படி நடந்து விடக் கூடாது, மக்களுக்கு பயம் இருக்க வேண்டும், பயம் இருக்கும் வரைதான் அவர்களை ஆள முடியும் என்பதை ஆட்சியாளர்கள் உணர்ந்துள்ளனர். எனவேதான் தற்போது , போராடும் மாணவர்கள், இளைஞர்கள் மீது குண்டர் சட்டம், தேச துரோக வழக்கு என பாய்ச்சுகின்றனர். எனினும், ஆட்சியாளர்களுக்கு இருக்கும் அச்சத்தையே "மெரினாவில் கூடுவதற்கே தடை" என்ற அறிவிப்பு உணர்த்துகிறது. மக்கள் மனதில் போராட்டத் தீ கனன்று கொண்டிருப்பதை ஆட்சியாளர்கள் உணர வேண்டும்.*

## நீதிமன்றங்களின் ஒருதலைப்பட்ச தடையாணைகள்

உழைப்பாளர், தொழிலாளர், அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்கள் இதுநாள் வரை கம்பெனி முதலாளிகளையோ, அரசாங்கங்களையோ எதிர்த்துத்தான் நடந்து வந்திருக்கின்றன. இனிமேல் இந்தப் போராட்டங்கள் அவர்களுடன் நீதிமன்றங்களையும் எதிர்த்து போராட வேண்டிய கூடுதல் சுமை, ஊதிய வர்க்கத்தினரின் தோள்களில் வைக்கப்பட்டுள்ளது. போராட்டம் நடத்த தொழிற்சங்கங்களுக்கு உரிமையில்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வைத்துக்கொண்டு எந்திரத்தனமான தடையாணைகளை, எதிர்தரப்பு நியாயத்தைக் கேட்காமல் ஒருதலை பட்சமாக உத்தரவிட்டு நீதிமன்றங்கள் அதனுடைய மாண்பை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன.

தொழிலாளியின் கையில் உள்ள ஒரே ஆயுதம் போராட்டம் மட்டுமே என்பதை நீதிமன்றங்கள் கொஞ்சமேனும் உணரவேண்டும் என்பதுதான் போராடுபவர்களின் கோரிக்கையாக உள்ளது. வேலை நிறுத்தப் போராட்டம் என்பது நேற்றைக்கு முடிவெடுத்து இன்றைக்கு நடைமுறைப்படுத்துவது அல்ல. அது குறிப்பிட்ட காலஅவகாசம் கொடுத்து அந்த காலஅவகாசத்திற்குள்ளும் நிர்வாகமோ அரசாங்கமோ கோரிக்கையை ஏற்க முன்வராத நிலையில் வருவது. எந்த ஊழியரும், தொழிலாளியும் விரும்பி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை. அரசாங்கத்தை, நிர்வாகத்தை பலமுறை கோரிய பின்னரும் அரசாங்கமோ நிர்வாகமோ ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்க மறுக்கும்போதுதான் போராட்டங்கள் தீவிரமடைகின்றன.

2016ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் தொடர்ந்து நடந்துவரும் போராட்டங்கள், போராடுபவர்களின் நியாயங்களை அரசு புரிந்துகொள்வதில்லை என்பதை மட்டுமல்ல, கண்டுகொள்ளவும் தயாராகவே இல்லை என்பதையும் தாண்டி ஆட்சியாளர்களிடம் வெளிப்படும் அலட்சியப் போக்கையும் இப்போராட்டங்கள் அம்பலப்படுத்தி வருகின்றன. போராட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் அவதிகளைப் பற்றி யோசிக்காமல், நீ எத்தனை நாள் வேண்டுமானாலும் போராடிக்கொள் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை என்று ஆட்சியாளர்கள் நினைப்பார்களேயானால் அதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்க முடியும். அடுத்த தேர்தலில் மக்கள் நமக்கு கண்டிப்பாக வாக்களிக்கப்போவதில்லை என்ற தெளிவு; இரண்டாவது மீதமுள்ள மூன்று ஆண்டுகளில் அதிகாரத்திலிருந்து கொண்டு சம்பாதிக்க வேண்டியவைகளை சம்பாதித்துவிட வேண்டும் என்ற கொள்ளை லட்சியம். அரசாங்கத்திற்கு ஆபத்தோ நிர்ப்பந்தங்களோ எழாத வரை எந்தப் பிரச்னையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை என்ற கங்கணமும் இந்த நாற்காலிதாசர்களிடம் நன்றாகவே தெரிகிறது. அதனால்தான் தமிழக மக்களின் நலன்பாதிக்கும் செயல்களை மேலே உள்ளவர்கள் செய்யப்பணித்தால் அதை எதிர்க்காமல் உடனே நிறைவேற்றுவதில் காட்டும் மெத்தப்பணிவு இன்றைய ஆட்சியாளர்களிடம் வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறது.

மக்களின் பாரம்பரியம், சம்பிரதாயம், சமூகநீதி, அரசியலமைப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட உரிமைகள் போன்றவற்றின் பேரில் நடைபெறும் போராட்டங்களை அவற்றின் உள்ளே இருக்கும் வலிகளை, வேதனைகளை நீதிமன்றங்கள் புரிந்துகொள்ளத் தவறியுள்ளனவா என்பது இன்றைய நாளில் மிகப்பெரிய கேள்வியாக உருவெடுத்துள்ளது. ஜல்லிக்கட்டு என்ற பாரம்பரியத்தின் மீது நீதிமன்றம் அறிவியல்பூர்வமான விஷயத்தை கவனத்தில் கொண்டதே தவிர ஒரு பிரிவு மக்களின் பாரம்பரிய மற்றும் கலாச்சார உணர்வுகளை கவனிக்கத் தவறிவிட்டது என்பதை ஒட்டுமொத்த மெரினா

புரட்சி உலகுக்கு எடுத்துக்காட்டியது. விளைவு நீதிமன்றத்தின் தடை உத்தரவுகளை தகர்த்தெரிந்தது மக்கள் புரட்சி. அடுத்ததாக, அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தையும் நீதிமன்றம் தடையாணை முலம் தடுக்கப் பார்த்தது. ஆனால் தடையாணையை உடைத்துவிட்டு போராட கடைக்கோடி அடிப்படை அரசு ஊழியனும் தயாராக இருந்தான். அதனால் அந்த போராட்டமும் தடைபற்றி கவலை கொள்ளாமல் நடந்தது. தடையை மீறி வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியதால் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டது. நீதிமன்றத்தின் முன் ஊழியர் தரப்பு நியாயங்கள் விளக்கமாக எடுத்து சொல்லப்பட்ட பின்னர் நீதிமன்றம் அரசாங்கத்தை உடனே ஊதியமாற்றத்தை ஏற்படுத்த காலக்கெடு விதித்தது. போக்குவரத்து தொழிலாளர்கள் பிரச்சனையிலும் உயர்நீதிமன்றம் ஒருதலைப்பட்ட தடையை விதித்தது. பொங்கி எழுந்துநின்ற போராட்ட உணர்வுகளுக்கு முன் இந்த தடையாணையை போக்குவரத்து தொழிலாளர்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதை அவர்களின் அசராத போராட்டம் எடுத்துக்காட்டியது.

சட்டங்கள் பெரும்பான்மையை உருவாக்குவதில்லை. பெரும்பான்மைதான் சட்டங்களை உருவாக்குகின்றன என்ற அடிப்படை சித்தாந்தத்தை நீதிமன்றங்கள் கவனிக்கத் தவறிவிட்டன என்பதைத்தான் இந்த ஒருதலைப்பட்ச தடையாணைகள் எடுத்துக் காட்டுகின்றன. ஜல்லிக்கட்டு போராட்டம், ஜாக்டோ ஜியோ போராட்டம், போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டம் இவற்றில் போராட்டக்காரர்களிடம் காணப்பட்ட கொந்தளிப்புகளுக்கு நீதிமன்றம் தடைபோட்டது சுனாமி பேரலைகளுக்கு தடைபோட்டது போல் இருந்துது.

ஜல்லிக்கட்டு மீண்டும் வந்ததால் போராட்டம் வெற்றியோடு முடிந்தது. ஆனால் ஜாக்டோ ஜியோ போராட்டக் கனலும், போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோபத்தணலும் இன்னும் உயிர்ப்புடன்தான் இருக்கின்றன. நீதிமன்றத்தின் நியாய தர்மங்களைப் பொறுத்து இந்த இரு போராட்டங்களின் திசைகள் தீர்மானிக்கப்படக்கூடும்.

நடிகர் கமல்ஹாசன் ஒருபுறம் அரசியலில் தான் நுழைந்துவிட்டதாக கூறுகிறார். மறுபுறம் ரஜினி தேர்தல் வந்தால் 234 தொகுதிகளிலும் தனித்து நிற்கப் போவதாக அறிவிப்பு வெளியிடுகிறார். மூன்றாவதாக டிடிவி தினகரன் புதிய கட்சி ஆரம்பிக்கப்போவதாக கூறி வருகிறார். இவர்களுக்கு மத்தியில் ஆளும் அதிமுக அமைச்சர்கள் ஆட்சியை காப்பாற்றிக்கொள்ள தமிழகத்தில் சிறப்பான ஆட்சி நடந்து வருவதாக நாளொரு நடிப்பும் பொழுதொரு பொய்யுரையுமாக பிரச்சாரம் மேற்கொண்டு வருகிறார்கள். இந்த கலங்கிய நீரோடையில்தான் அரசு ஊழியர்களாகிய நாம், 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகைக்காக, புதிய ஓய்வூதியத்திட்டத்தை ஒழித்துக் கட்டுவதற்காக, ஊதிய முரண்பாடுகளை நீக்குவதற்காக, உரிமைகளை காப்பதற்காக, கோரிக்கைகள் எனும் காகிதக் கப்பலில் போராட்டம் எனும் துடுப்புகளால் சாகசப் பயணம் மேற்கொண்டு வெற்றிக்கான இலக்குகளை அடைந்தே தீரவேண்டியுள்ளது. இலக்குகள் கடினமானவை என்ற போதிலும் இலட்சியங்கள் உயர்வானவை . உயர்வான இலட்சியங்களால் கடினமான இலக்குகள் கைவசமாகும். வானம் நிச்சயம் நம் வசப்படும். ❖

---

## தேசம் ஒருநாள் மாறும்

*சேற்றுக் காலுடன் விவசாயி படைத்த தானியங்கள்*
*தேசத்திற்கு உயிர் கொடுக்கட்டும்.*

*அழுக்கு வியர்வை சிந்தும் தொழிலாளி உற்பத்தி*
*வலிமை கொடுக்கும் குருதியாகட்டும்.*

*அறிவியல் கல்வி பெற்ற இளைஞனின்*
*பரந்த அறிவால்*
*தேசம் நிமிர்ந்த நடைபோடட்டும்.*

*மலம் அள்ளிய எம் பெற்றோரின்*
*கரங்கள் தேசிய சின்னமாகட்டும்.*

## அதிகாரம்

*மெலிதாய் சுழலும் மின்விசிறி,*
*சாய்ந்துட்கார பூத்துவாலை அணிந்த நாற்காலி,*
*அழைப்பு மணி சகிதம் பரந்த மேசை,*
*திறந்து மூடும் கதவுக்கு வெளியே*
*அய்ம்புலனாலும் அலுவல் செய்ய*
*அலுவலக உதவியாளர்,*
*இன்னும் பல இருந்தும்....*
*கக்கத்தில் பை இடுக்கி*
*கையில் மனு ஏந்தி கதவைத் தள்ளி*
*'அய்யா வணக்கம்....'*
*என்று எவராவது சொல்லும் வரை*
*செத்த பாம்பென கிடக்கும் அதிகாரம்!*

**- ஆர்.நடராஜன்**

## நேற்று... 21 மாத நிலுவைத்தொகை இழப்பு என்ற சம்மட்டி அடி
## இன்று... பொங்கல் போனஸ் பறிப்பு என்ற சாட்டையடி
## நாளை... இன்னொரு உரிமை இழப்பு வருமுன் விரட்டி அடி

**த**மிழக அரசு ஆண்டு தோறும் அரசு ஊழியர்களுக்கு வழங்கும் மிகை ஊதியம் மற்றும் சிறப்பு மிகை ஊதியத்தை (பொங்கல் கருணைத்தொகை) இந்த ஆண்டு ஏ மற்றும் பி பிரிவு அரசு ஊழியர்களுக்கு இல்லை என அரசாணை வெளியிட்டுள்ளது. கடந்த முப்பது ஆண்டுகளாக அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் அனைவரும் பெற்றுவந்த பொங்கல் கருணைத் தொகை இந்த ஆண்டு மறுக்கப்பட்டுள்ளதிலிருந்து ஏற்கெனவே பெற்றிருந்த உரிமைகளில் ஒன்றை அரசு ஊழியர்களின் பெரும்பகுதியினர் இதன் மூலம் இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.

எந்த அரசாங்கமும் இதுவரை இதுபோன்ற முடிவை எடுத்ததில்லை என்பதுடன் ஏற்கெனவே 21 மாத ஊதியமாற்ற நிலுவைத் தொகையை இழந்து நிற்கும் அரசு ஊழியர்களில் ஏ மற்றும் பி பிரிவினருக்கு இது வெந்த புண்ணில் பாய்ச்சிய வேலாக தைத்துள்ளது.

சென்ற ஆண்டுகளில் அரசு அறிவித்த மிகை ஊதியம் சி மறும் டி பிரிவு ஊழியர்களுக்கு மாதம் ஒன்றுக்கு 30 நாட்கள் என்ற அடிப்படையில் 30 நாட்கள் ஊதியத்திற்கு இணையான தொகை தற்காலிக மிகை ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டு ரூ.3000/- உச்சவரம்பாக வைக்கப்பட்டு கணக்கிடப்பட்டும், ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களுக்கு சிறப்பு தற்காலிக மிகை ஊதியமாக ரூ.1000/- ஆக நிர்ணயிக்கப்பட்டு கொடுக்கப்பட்டு வந்ததை, தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அனைத்து பிரிவினருக்கும் 30 நாள் ஊதியத்திற்கு இணையான தொகை வழங்க வேண்டுமென்றும், உச்சவரம்பை நிர்ணயிக்கக்கூடாது என்றும் வேண்டுகோளும், கோரிக்கையும், பிரதிநிதித்துவமும் கொடுத்திருந்த நிலையில் தமிழக அரசோ, அரசு ஊழியர்களின் கோரிக்கையை ஏற்காததோடு மட்டுமல்லாமல் ஏற்கெனவே ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களுக்கு கொடுத்துவந்த சிறப்பு தற்காலிக மிகை ஊதியமான ரூ.1000/-ஐ இல்லை என கைவிரித்திருப்பது அரசுத்துறைகளில் பணிபுரியும் அனைத்து ஏ மற்றும் பி பிரிவு ஊழியர்களையும் அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

*மத்திய அரசு அதன் ஊழியர்களுக்கு 2014-2015ஆம் அண்டு முதல் உச்சவரம்பை ரூ.7000 ஆக உயர்த்தி 2015ஆம் ஆண்டு முதல் ரூ.7000 போனஸ் அறிவித்து அதற்கான நிலுவைத் தொகையினையும் வழங்கியுள்ளது. மத்திய அரசிற்கு இணையான ஊதியம் ஏற்ற கோட்பாடு அடிப்படையில் மத்திய அரசு ஊழியர்களுக்கு இணையான ஊதியத்தை படிகளின்றி பெற்று வரும் நிலையில் தமிழக அரசு ஊழியர்களுக்கும் ரூ.7000 2014-2015ஆம் ஆண்டு முதல் நிலுவையுடன் வழங்கிட தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் அரசிடம் பல முறையீடுகளை வழங்கியுள்ள நிலையில் தற்போது அறிவிக்கப்பட்டுள்ள சி&டி பிரிவினருக்கு மட்டும் போனஸ் என்ற அறிவிப்பும் ஏ மற்றும் பி பிரிவினருக்கு போனஸ் மறுக்கப்பட்டுள்ள அறிவிப்பும் மிகுந்த அதிர்ச்சியையும் ஏமாற்றத்தையும் அளித்துள்ளது.*

*கடந்த முப்பது ஆண்டுகளாக அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் அனைவரும் பெற்றுவந்த பொங்கல் கருணைத் தொகை இந்த ஆண்டு மறுக்கப்பட்டுள்ளதிலிருந்து ஏற்கெனவே பெற்றிருந்த உரிமைகளில் ஒன்றை அரசு ஊழியர்கள், ஆசிரியர்களின் பெரும்பகுதியினர் இதன் மூலம் இழக்கக்கூடிய சூழ்நிலை உருவாகியுள்ளது.*

*எந்த அரசாங்கமும் இதுவரை இதுபோன்ற முடிவை எடுத்ததில்லை என்பதுடன் ஏற்கெனவே 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை இழந்த பிறகும் அரசு ஊழியர்களில் ஏ மற்றும் பி பிரிவினருக்கு இது வெந்த புண்ணில் பாய்ச்சிய வேலாக தைத்துள்ளது.*

*மத்திய அரசு போனஸ் சட்டத்தை திருத்தி, மூன்றாண்டுகளாக தமது ஊழியர்களுக்கு உயர்த்தப்பட்ட போனஸ் தொகையினை வழங்கிவரும் நிலையிலும், மத்திய அரசுக்கு இணையான ஊதிய மாற்றம் கடந்த 01.01.2016 முதல் தமிழக அரசு ஊழியர்களுக்கு அமல்படுத்தப்பட்டுள்ளதாக அரசு தம்பட்டம் அடித்துவரும் நிலையிலும், சி மற்றும் டி பிரிவினருக்கு போனஸ் உச்சவரம்பு சட்டத்தின்படியாவது இவ்வாண்டிற்கு போனஸ் அறிவிக்கப்படும் என ஊழியர்கள் எதிர்பார்த்திருந்தனர். அதேபோல, ஏ மற்றும் பி பிரிவினருக்கு ஊதிய மாற்றத்திற்கு ஏற்றவாறு கருணைத்தொகை ரூ.1000/-லிருந்து ரூ.3000/- என மாற்றம் செய்து வழங்கப்பட்டிருக்க வேண்டும்.*

*இந்நிலையில், ஏமாற்றமளிக்கும் ஊதிய மாற்றம் பெற்றுள்ள அரசு ஊழியர்கள் (ம) ஆசிரியர்கள் தமிழர் திருநாளாம் பொங்கல் பண்டிகைக்கு முன்னதாக சி (ம) டி பிரிவு ஊழியர்களுக்கு ரூ.7000 மற்றும் ஏ (ம) பி பிரிவு அலுவலர்களுக்கு ரூ.3000 ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ.1500 ரூபாயாக கிடைத்திடும் என்ற மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்த நிலையில், அரசின் இந்த அறிவிப்பு ஊழியர்கள் மத்தியில் வேதனையையும் அளித்து கோபக்கனலை ஏற்படுத்தியுள்ளது.*

பல்கலைக் கழக மானியக்குழு/அனைத்திந்திய தொழில் நுட்பக் கல்விக்குழு/ இந்திய வேளாண் ஆராய்ச்சிக் கழகத்தின் ஊதிய விகிதம், அனைத்திந்தியப் பணி விதிமுறைகள் ஆகியவற்றின் கீழ் வருகின்றவர்கள் உட்பட ஏ மற்றும் பி பிரிவைச் சேர்ந்த அரசு ஊழியர்கள் இந்த மிகைத்திட்டத்தின் கீழ் வரமாட்டார்கள் என்றும் அவர்கள் எந்தவொரு மிகை ஊதியத் தொகையை பெறவும் தகுதி உடையவர்கள் அல்லர் என்றும் காரணம் காட்டி ஏ மற்றும் பி பிரிவு அரசு ஊழியர்கள் இத்தனை ஆண்டுகள் பெற்றுவந்த சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை தரமுடியாததற்கு நியாயமற்ற காரணம் காட்டியுள்ள இவ்வரசு, மத்திய அரசு ஊழியர்கள் பெற்றுவரும் பல சலுகைகளை தமிழக அரசு ஊழியர்களுக்கு கொடுக்காமல் இருப்பதற்கு காரணங்களையும் விளக்கினால் அதற்கான நியாயங்கள் தெளிவுபடும்.

காலங்காலமாக அரசு ஊழியர்கள் பெற்றுவந்த உரிமையை, அதுவும் தமிழர்கள் திருநாளாக கொண்டாடப்படும் பொங்கல் பண்டிகையை உற்சாகமாகக் கொண்டாடும் வகையில் வழங்கப்படும் சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை, அது சொற்பத் தொகையாக இருந்தபோதிலும் தர மறுத்து அதற்கு ஒரு தகுதியற்ற நியாயம் கற்பித்திருப்பது எந்த ஒரு அரசுக்கும் ஏற்புடைய செயல் அல்ல.

எனவே, தமிழகத்தில் அரசுத் துறைகளில் பணிபுரியும் அனைத்து ஏ மற்றும் பி பிரிவினருக்கு சிறப்பு தற்காலிக மிகை ஊதியத்தை மற்ற பிரிவினருக்கு வழங்கியது போல் வழங்கி அனைத்து அரசு ஊழியர்களும் தமிழர் திருநாளை உற்சாகமாக கொண்டாடிட அரசு உரிய அரசாணை பிறப்பிக்க தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் சார்பில் வலியுறுத்துகிறோம். ஏற்கெனவே 21 மாத ஊதிய மாற்ற நிலுவைத் தொகையை பிடித்து வைத்துள்ள நிலையில் பொங்கல் கருணைத் தொகையிலும் கை வைத்திருக்கும் செயல் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போன்றதாகும். அரசு ஊழியர்களின் உள்ளக்கிடக்கையை முழுவதும் உணர்ந்து, அரசு உடனடியாக ஊ ஞ ஷ ஏடுதவு ஊழியர்களுக்கு ரூ.7000 மற்றும் ஏ (ம) பி பிரிவு அலுவலர்களுக்கு ரூ.3000 ஓய்வூதியம் பெறுவோர்க்கு ரூ.1500 ரூபாயாக கிடைத்திடும் வகையில் அரசாணை பிறப்பிப்பதுடன் 30 ஆண்டுகளுக்கும் மேலாக வழங்கப்பட்டு வரும் பொங்கல் கருணைத் தொகை தொடர்வதன் மூலமாக அரசு தன் ஊழியர்களின் பாரம்பரிய உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். நேற்று... 21 மாத நிலுவைத்தொகை இழப்பு என்ற சம்மட்டி அடி, இன்று... பொங்கல் போனஸ் பறிப்பு என்ற சாட்டையடி, நாளை... இன்னொரு உரிமை இழப்பு வருமுன் போராட்டக் களம் கண்டு நம் உரிமைகளை பறிக்கும் நயவஞ்சகர்களை விரட்டி அடிப்போம்.

❖

# கட்டண உயர்வை தவிர்த்திருக்க முடியும்
# தமிழக அரசை விளாசுகிறார் அ.சவுந்தரராசன்

**போ**க்குவரத்து ஊழியர்களுக்கு ஊதியம் தரவேண்டியிருக்கிறது என்பது உள்ளிட்ட சொத்தையான காரணங்களை முன்வைத்து, வரலாறு காணாத அளவிற்கு பஸ் கட்டண உயர்வை அமலாக்கி, தமிழக மக்களை துயரத்தின் - கொதிப்பின் உச்சத்திற்கு தள்ளியிருக்கிற அதிமுக அரசை கடுமையாக விமர்சிக்கிறார் சமீபத்தில் நடந்து முடிந்த போக்குவரத்து தொழிலாளர் வேலைநிறுத்தப் போராட்டத்தின் கள நாயகனாக திகழ்ந்தவரும், சிஐடியு மாநிலத் தலைவருமான அ.சவுந்தரராசன். "தமிழக அரசு போக்குவரத்து கட்டணத்தை உயர்த்தியிருப்பது கண்டனத்திற் குரியது. போக்குவரத்துக் கழகங் கள் கடும் நிதி நெருக்கடியில் சிக்கி இருக்கின்றன என்பதை தொடர்ந்து அரசின் கவனத்திற்கு தொழிற் சங்கங்களும் எடுத்துரைத்து வந்துள்ளன. தமிழக அரசும், நீதிமன்றத்திலேயே போக்குவரத்து கழகங்கள் நிதி நெருக்கடியில் இருக்கிறது என்று தெளிவுபடுத்தி உள்ளது.இந்த நிதி நெருக்கடியை தமிழக அரசு சீர் செய்திருக்க வேண்டும். ஆனால் எங்கிருந்து பணம் எடுத்து இதனை சீர் செய்வது என்ற அடிப்படையிலான கேள்வி எழுகிறது". எனக்குறிப்பிட்ட அ.சவுந்தரராசன், அதற்கான தீர்வையும் முன்வைக்கிறார்:



இந்தியாவில் எங்குமில்லாத அளவிற்கு தமிழக கிராமப்புற பகுதிகளில் போக்குவரத்து வசதி ஏற்படுத்தப்பட்டு இருக்கிறது. நல்ல விஷயம் தான். ஆனால், போக்குவரத்துக் கழகங்கள் வருமானமற்ற வழித்தடங்களில் பாதிக்கும் மேற்பட்ட பேருந்துக்களை இயக்கி வருகின்றன. இதனால் போக்குவரத்துக் கழகங்கள் தெரிந்தே பேரிழப்பை சந்திக்கின்றன. ஆகவே, அரசு இதற்கான இழப்பீட்டை சமூக நோக்குடன் போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்கிட வேண்டும்.

படிக்கும் மாணவர்களின் நலன் கருதி, அவர்களில் சுமார் 30 லட்சம் பேருக்கும் மேல் இலவச பயண வசதி செய்யப்பட்டு வருகிறது. இது தமிழகத்தின் கல்வித் துறையில் பெரும் வளர்ச்சி ஏற்பட மிக முக்கிய காரணியாக அமைந்திருக்கிறது என்பது மறுப்பதற்கில்லை. இது மிகவும் அவசியமானதாகும். இதற்கான செலவினத்தை போக்குவரத்துக் கழகங்களுக்கு அரசு தருவதில்லை.

அதிகாரிகளின் அளவுக்கு அதிகமான முறை கேடுகள், ஊழல்கள் போன்ற பல காரணிகளும் நட்டத்திற்கு காரணமாக இருக்கின்றன.

### கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக

ஒவ்வொரு ஆண்டும் இந்த தொகையினை அரசு ஈடுகட்டி யிருந்தால் இப்போது இந்த நெருக்கடி நிலை வந்திருக்க வாய்ப்பில்லை. ஏற்கெனவே கடும் வாழ்க்கை நெருக்கடியில் உள்ள ஏழை எளிய மக்கள் மீது இவ்வளவு பெரும் கட்டண சுமையை ஏற்ற வேண்டிய அவசியமும் இருந் திருக்காது.

இந்திய அரசு மூர்க்கத்தனமாக நியாயமற்ற முறையில் பெட்ரோல், டீசல் விலையை தொடர்ந்து உயர்த்தி வருகிறது. மத்திய அரசின் இந்த மக்கள் விரோத கொள்கைகளும் இந்த கட்டண உயர்விற்கு வித்திடுகிறது.

போக்குவரத்துக் கழகங்களுக்கு மாநில அரசு ஆண்டுதோறும் பட்ஜெட்டில் 2 ஆயிரம் கோடியில் இருந்து 3 ஆயிரம் கோடி ரூபாய் வரை ஒதுக்கினால் இந்த கட்டண உயர்வை தவிர்க்கலாம். ஆண்டுக்கு ஒன்றரை லட்சம் கோடி ரூபாய்க்கு பட்ஜெட் போடுகின்ற இந்த அரசுக்கு இது ஒரு பெரிய விஷயமே அல்ல.

போக்குவரத்துக் கழகங்கள் தமிழக பொருளாதார மேம்பாட்டிலும், ஒட்டுமொத்த உற்பத்தி மதிப்பிற்கும், தனிநபர் சராசரி வருமானத்திற்கும், கல்வி, சுகாதாரம் போன்ற மனிதவள குறியீடுகளுக்கும் அளப்பரிய பங்களிப்பை செய்து வருகிறது. சமூகத்திற்கு

போக்குவரத்துக் கழகங்களால் கிடைக்கிற இந்த வகையான லாபம் எந்த பண மதிப்பை கொண்டும் அளவிட முடியாது.

எவ்வளவோ சலுகைகளை தருகிற மாநில அரசு போக்குவரத்துக் கழகங்களுக்கு, நாளும் பயணம் செய்கிற இரண்டு கோடி மக்களுக்கு மலிவு கட்டணத்தில் பயண வசதி செய்து கொடுப்பது எந்த வகையிலும் தவறல்ல. இது ஒரு கட்ட மைப்பு சேவையாகும்.

தொழிற்சங்கங்கள் கடந்த பத்தாண்டுகளாக மாநில அரசை போக்குவரத்துக் கழகங்களுக்கு வழங்க வேண்டியநிதியினை வழங்க வலியுறுத்தி வருகின்றன. இந்த அரசு எம்எல்ஏக்களுக்கு ஊதியத்தை ஒரு லட்சமாக உயர்த்தியுள்ளது. மற்ற துறையினருக்கும் ஊதிய உயர்வு வழங்கியுள்ளது. உழைக்கின்ற தொழி லாளர்களுக்கு அரைகுறை ஊதிய உயர்வை வழங்கிவிட்டு, கட்டண உயர்வுக்கு காரணமாக இதை காட்டுவது அரசின் தவறான அணுகு முறையாகும்.

அரசின் இந்த பஸ் கட்டண உயர்வு மக்களுக்கு பெரும் சுமையை, நெருக்கடியை ஏற்படுத்தி இருக்கிறது. குறிப்பாக, பணிபுரியும் தளங்களுக்கு தினமும் பஸ் பயணத்தை மட்டுமே நம்பி இருக்கும் மக்களை திண்டாட வைத்திருக் கிறது. இந்த பஸ் கட்டண உயர்வு, மக்கள் தலையில் விழுந்த ஓர் பேரிடி என்று தான் சொல்ல வேண்டும்.

எனவே, தமிழக அரசு 60 சதவீதத்தில் இருந்து 100 சதவீதம் வரை பஸ் கட்டணம் உயர்த்தி யிருப்பதை கைவிட்டு, மறுபரிசீலனை செய்ய வேண்டும். அதோடு இனி வரும் ஒவ்வொரு பட்ஜெட்டிலும் தனியாக நிதி ஒதுக்கீடு செய்து போக்கு வரத்து கழகங்களை மேலும் செழுமைப்படுத்த வேண்டும். ❖

## வாசகர் கடிதம்

கடந்த மாதம் வெளிவந்த இதழில் புத்தாண்டில் உறுதிமொழி, அருவி போல் விழு தீ போல் எழு நதி போல் ஓடிக்கொண்டேயிரு ஆஹா என்ன அற்புதான கட்டுரை. ரஷ்யா மகாத்மா சோவியத் யூனியனின் மாபெரும் புரட்சி நாயகன் மரியாதைக்குரிய லெனினை பற்றிய கட்டுரை சிறப்பாக இருந்தது. இது மட்டுமல்லாது வெளிவந்த அனைத்து கட்டுரைகளும் சிறப்பாக இருந்தது. மேலும் இந்த இதழில் கேள்வி-பதில் வந்தால் சிறப்பாக இருக்கும். மருத்துவ குறிப்பு மற்றும் சிந்தனைத் துளிகள் உட்பட தோழர்கள் விரும்பினால் அதற்கு முக்கியத்துவம் கொடுத்து பிரசுரம் செய்ய வேண்டும்.

**ரா.தட்சிணாமூர்த்தி**,
கடலூர்

ஜனவரி 2018 இதழ் படித்தேன். திருப்பூர் மா வட்டம் தாராபுரம் வட்டக் கிளை சார்பாக ஆயிரம் ஆண்டு சந்தா வழங்கியுள்ளது பாராட்டுக்குரியது. மற்ற வட்டக் கிளைகளுக்கு முன்னுதாரணமாக தாராபுரம் வட்டக் கிளை திகழ்கின்றது. பொதுச் செயலாளர் அவர்களின் கட்டுரை 2017ஆம் ஆண்டு நடைபெற்ற நிகழ்வுகளை கண்ணாடி போல் தெளிவாக விளக்குகின்றது.

- **ஐ.ஷேக் முகம்மது**,
அலங்கியம்

# எழுந்து வா தோழி

"தாழ்வுற்ற நடைமுறையை
தகர்த்தெறிவோம் தோழி.

உலரா கூந்தலில் தளர் சடை பின்னலுடனும்,
தளர்ந்த உடலும் தவிக்கும் மனதுடனும்
அலுவல் நேரத்திற்கு முன்-பின்னான நம்
மிகை உழைப்பின் பலன் கேட்போம்.

வசதியாய் சாய்ந்துகொண்டு
குறிப்புக் கோப்புக்கு
விளக்கத்தை செவிமடுக்கும்
அதிகாரியின் தனித்தறையில்
வலிக்கும் கால்களோடு நிற்காமல்
உட்கார்ந்து பேசும் உரிமை கேட்போம்.

நம்மைச் சுற்றி கொட்டிக் கிடக்கும்
கோரிக்கைகளை சுமந்துகொண்டு
நம் தோழன் மட்டுமே
எப்போதும் போல் அலுவலக வாசலிலே
ஆள் சேர்த்துக்கொண்டிருக்கிறான்.

மூத்த சகோதரி அழைப்பிது.
முடியும் உன்னால் எழுந்து வா.

இணைந்து நின்று குரல் கொடுத்தால்
இரும்புத் திரையும் நொறுங்கிப் போகும்."

- **ஆர்.நடராஜன்**

# போராட்டம் என்ற பட்டாக்கத்தியும், தடையாணை என்ற அட்டகத்தியும்!

உழைப்பாளர், தொழிலாளர், அரசு ஊழியர், ஆசிரியர் போராட்டங்கள் இதுநாள் வரை கம்பெனி முதலாளிகளையோ, அரசாங்கங்களையோ எதிர்த்துத்தான் நடந்து வந்திருக்கின்றன. இனிமேல் இந்தப் போராட்டங்கள் அவர்களுடன் நீதிமன்றங்களையும் எதிர்த்து போராட வேண்டிய கூடுதல் சுமை, ஊதிய வர்க்கத்தினரின் தோள்களில் சுமத்தப்பட்டுள்ளது. போராட்டம் நடத்த தொழிற்சங்கங்களுக்கு உரிமையில்லை என்ற உச்ச நீதிமன்றத்தின் தீர்ப்பை வைத்துக்கொண்டு எந்திரத்தனமான தடையாணைகளை, எதிர்த்தரப்பு நியாயத்தைக் கேட்காமல் ஒருதலைபட்சமாக உத்தரவிட்டு நீதிமன்றங்கள் அதனுடைய மாண்பை மெல்ல மெல்ல இழந்து வருகின்றன.

தொழிலாளியின் கையில் உள்ள ஒரே ஆயுதம் போராட்டம் மட்டுமே என்பதை நீதிமன்றங்கள் கொஞ்சமேனும் உணரவேண்டும் என்பதுதான் போராடுபவர்களின் கோரிக்கையாக உள்ளது. வேலை நிறுத்தப் போராட்டம் என்பது நேற்றைக்கு முடிவெடுத்து இன்றைக்கு நடைமுறைப்படுத்துவது அல்ல. அது குறிப்பிட்ட காலஅவகாசம் கொடுத்து அந்த காலஅவகாசத்திற்குள்ளும் நிர்வாகமோ, அரசாங்கமோ கோரிக்கையை ஏற்க முன்வராத நிலையில் வருவது. எந்த ஊழியரும், தொழிலாளியும் விரும்பி வேலை நிறுத்தப் போராட்டத்தில் ஈடுபடுவதில்லை. அரசாங்கத்தை, நிர்வாகத்தை பலமுறை கோரிய பின்னரும் அரசாங்கமோ, நிர்வாகமோ ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை பரிசீலிக்க மறுக்கும்போதுதான் போராட்டங்கள் தீவிரமடைகின்றன.

2016ஆம் ஆண்டிலிருந்து தமிழகத்தில் தொடர்ந்து நடந்துவரும் போராட்டங்கள், போராடுபவர்களின் நியாயங்களை அரசு புரிந்துகொள்வதில்லை என்பதை மட்டுமல்ல, கண்டுகொள்ளவும் தயாராகவே என்பதையும் தாண்டி ஆட்சியாளர்களிடம் வெளிப்படும் அலட்சியப் போக்கையும் இப்போராட்டங்கள் அம்பலப்படுத்தி வருகின்றன. போராட்டங்களால் மக்களுக்கு ஏற்படும் அவதிகளைப் பற்றி யோசிக்காமல், நீ எத்தனை நாள் வேண்டுமானாலும் போராடிக்கொள் அதைப்பற்றி எங்களுக்குக் கவலையில்லை என்று ஆட்சியாளர்கள் நினைப்பார்களேயானால் அதற்கு இரண்டு காரணங்கள் மட்டுமே இருக்க முடியும். அடுத்த தேர்தலில் மக்கள் நமக்கு கண்டிப்பாக வாக்களிக்கப்போவதில்லை என்ற தெளிவு; இரண்டாவது மீதமுள்ள மூன்று ஆண்டுகளில் அதிகாரத்திலிருந்து கொண்டு சம்பாதிக்க வேண்டியவைகளை சம்பாதித்துவிட வேண்டும் என்ற கொள்ளை லட்சியம். அரசாங்கத்திற்கு ஆபத்தோ நிர்ப்பந்தங்களோ எழாத வரை எந்தப் பிரச்னையும் ஏறெடுத்துப் பார்ப்பதில்லை என்ற கங்கணமும் இந்த நாற்காலிதாசர்களிடம் நன்றாகவே தெரிகிறது. அதனால்தான் தமிழக மக்களின் நலன்பாதிக்கும் செயல்களை மேலே உள்ளவர்கள் செய்யப்பணித்தால் அதை எதிர்க்காமல் உடனே நிறைவேற்றுவதில் காட்டும் மெத்தப்பணிவு இன்றைய ஆட்சியாளர்களிடம் வெட்டவெளிச்சமாய்த் தெரிகிறது.

மக்களின் பாரம்பரியம், சம்பிரதாயம், சமூகநீதி, அரசியலமைப்புச் சட்டத்தால் வரையறுக்கப்பட்ட உரிமைகள் போன்றவற்றின் பேரில் நடைபெறும் போராட்டங்களை அவற்றின் உள்ளே இருக்கும் வலிகளை, வேதனைகளை நீதிமன்றங்கள் புரிந்துகொள்ளத் தவறியுள்ளனவா என்பது இன்றைய நாளில் மிகப்பெரிய கேள்வியாக உருவெடுத்துள்ளது. ஜல்லிக்கட்டு என்ற பாரம்பரியத்தின் மீது நீதிமன்றம் அறிவியல்பூர்வமான விஷயத்தை கவனத்தில் கொண்டதே தவிர ஒரு பிரிவு மக்களின் பாரம்பரிய மற்றும் கலாச்சார உணர்வுகளை கவனிக்கத் தவறிவிட்டது என்பதை ஒட்டுமொத்த மெரினா புரட்சி உலகுக்கு எடுத்துக்காட்டியது. விளைவு நீதிமன்றத்தின் தடை உத்தரவுகளை தகர்த்தெரிந்தது மக்கள் புரட்சி. அடுத்ததாக, அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் நடத்திய போராட்டத்தையும் நீதிமன்றம் தடையாணை முலம் தடுக்கப் பார்த்தது. ஆனால் தடையாணையை உடைத்துவிட்டு போராட கடைக்கோடி அடிப்படை அரசு ஊழியனும் தயாராக இருந்தான். அதனால் அந்த போராட்டமும் தடைபற்றி கவலை கொள்ளாமல் நடந்தது. தடையை மீறி வேலை நிறுத்தப் போராட்டம் நடத்தியதால் ஜாக்டோ ஜியோ அமைப்பினர் மீது நீதிமன்ற அவமதிப்பு வழக்கும் தொடரப்பட்டது. நீதிமன்றத்தின் முன் ஊழியர் தரப்பு நியாயங்கள் விளக்கமாக எடுத்து சொல்லப்பட்ட பின்னர் நீதிமன்றம் அரசாங்கத்தை

உடனே ஊதியமாற்றத்தை ஏற்படுத்த காலக்கெடு விதித்தது. போக்குவரத்து தொழிலாளர்கள் பிரச்சனையிலும் உயர்நீதிமன்றம் ஒருதலைப்பட்ட தடையை விதித்தது. பொங்கி எழுந்துநின்ற போராட்ட உணர்வுகளுக்கு முன் இந்த தடையாணையை போக்குவரத்து தொழிலாளர்கள் ஒரு பொருட்டாக மதிக்கவில்லை என்பதை அவர்களின் அசராத போராட்டம் எடுத்துக்காட்டியது.

சட்டங்கள் பெரும்பான்மையை உருவாக்குவதில்லை. பெரும்பான்மைதான் சட்டங்களை உருவாக்குகின்றன என்ற அடிப்படை சித்தாந்தத்தை நீதிமன்றங்கள் கவனிக்கத் தவறிவிட்டன என்பதைத்தான் இந்த ஒருதலைப்பட்ச தடையாணைகள் எடுத்துக் காட்டுகின்றன. ஜல்லிக்கட்டு போராட்டம், ஜாக்டோ ஜியோ போராட்டம், போக்குவரத்து தொழிலாளர்கள் போராட்டம் இவற்றில் போராட்டக்காரர்களிடம் காணப்பட்ட கொந்தளிப்புகளுக்கு நீதிமன்றம் தடைபோட்டது சுனாமி பேரலைகளுக்கு தடைபோட்டது போல் இருந்துது.

ஜல்லிக்கட்டு மீண்டும் வந்ததால் போராட்டம் வெற்றியோடு முடிந்தது. ஆனால் ஜாக்டோ ஜியோ போராட்டக் கனலும், போக்குவரத்துத் தொழிலாளர்களின் கோபத்தணலும் இன்னும் உயிர்ப்புடன்தான் இருக்கின்றன. நீதிமன்றத்தின் நியாய தர்மங்களைப் பொறுத்து இந்த இரு போராட்டங்களின் திசைகள் தீர்மானிக்கப்படும்

போக்குவரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தப் போராட்ட வழக்கு சென்னை உயர்நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது அரசாங்கத்திற்கு எதிராக ஒட்டுமொத்த தொழிற்சங்கங்களின் கோபங்களையும் ஒருசேர பார்க்க முடிந்தது. பெரும்பான்மை சங்கங்களைப் புறக்கணித்துவிட்டு லெட்டர்பேடு சங்கங்களின் தலைவர்களிடம் தமிழக அரசு ஊதிய ஒப்பந்தம் போட்டதுதான் உடனடி வேலைநிறுத்தத்தில் தொழிலாளர்கள் குதிக்க காரணமாகிவிட்டது என்பது, 85 சதவீத பேருந்துகள் இயக்கப்படாததிலிருந்து நாட்டுக்கே தெரிந்திருந்த நிலையில் அட்வகேட் ஜெனரல் நீதிமன்றத்தில், ஒரு சில தொழிற்சங்கத்தினர் குறிப்பாக எதிர்தரப்பு அரசியல்கட்சிகளை சேர்ந்த தொழிற்சங்கத்தினர் மற்ற தொழிலாளர்கள் வேலைக்கு செல்வதைத் தடுத்து வருவதால்தான் வண்டிகள் ஓடவில்லை என்ற அடிப்படையற்ற வாதத்தை முன் வைத்தார்.

மேன்மைதங்கிய மாண்புமிகு நீதிபதிகளின் சிந்தனையோ பொதுமக்களுக்கு இடையூறு ஏற்படுத்தக்கூடாது, பண்டிகை நாட்களில் உருக்கு போய்விட்டு திரும்பும் மக்களுக்காக போக்குவரத்து தொழிலாளர்கள் வண்டிகளை இயக்க வேண்டும் என்றும் மற்ற விஷயங்களை பொங்கல் விடுமுறைக்குப் பின்னர் பார்க்கலாம் என்பதுமாகவும் இருந்தது.

தொழிற்சங்கத்தினர் இரண்டு நிபந்தனைகளை ஏற்றுக்கொண்டால் உடனே வேலைக்குத் திரும்புவதாக உறுதியளித்தனர். அந்த கோரிக்கைகளில் பிரதானமானது 2.44 காரணியின் அடிப்படையில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதிய ஒப்பந்தத்தை ரத்து செய்ய வேண்டும். இரண்டாவது, அரசாங்கம் அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த வேண்டும் என்பதாகும். இதற்கு அட்வகேட் ஜெனரல் ஒப்புக்கொள்ளவில்லை நீதிமன்றமும் அந்த நிபந்தனைகளை ஏற்கச்சொல்லியோ பரிசீலிக்கச் சொல்லியோ அட்வகேட் ஜெனரலை வலியுறுத்தவில்லை.

போக்குவரத்து தொழிலாளர்களின் கோரிக்கை 2.57 காரணியின் அடிப்படையின் ஊதிய ஒப்பந்தம் இருக்க வேண்டும் என்பதாகும். அரசாங்கம் வழங்கியதோ 2.44 மட்டுமே. வித்தியாச காரணியான 0.13ஐப் பொறுத்துதான் இந்த வேலை நிறுத்தப் போராட்டம் என்பது நீதிமன்றத்தின் கணிப்பாக இருந்தது.

நீதிபதிகள், போராடும் தொழிற்சங்கங்களின் வழக்குரைஞர்களிடம் கெஞ்சிப் பார்த்தார்கள், கேட்டுப் பார்த்தார்கள், உடனடியாக வேலைக்கு திரும்பா விட்டால் கடுமையான விளைவுகளை எதிர்பார்க்க நேரிடும் என்று அச்சுறுத்தும் தொனியிலும் சொல்லிப்பார்த்தார்கள். ஆனால் எந்த ஒரு தொழிற்சங்கத்தின் வழக்குரைஞரும் நீதிபதிகளின் கருத்துக்களை ஏற்பதாக இல்லை. ஒரு கட்டத்தில் நீதிமன்றம் எந்த உத்தரவு பிறப்பித்தாலும் அதை எதிர்கொள்ள போக்குவரத்து தொழிலாளர்கள் தயாராக இருப்பதாகவும் தொழிலாளர்கள் தரப்பு வழக்குரைஞர்கள் வாதாடியபோது நீதிமன்றத்தில் கொஞ்சம் பதட்டமாகத்தான் இருந்தது. நிதிபதிகள், தொழிற்சங்கங்களுக்காக ஆஜராகும் வழக்குரைஞர்கள் தொழிலாளர்களிடம் பேசி மக்கள் நலனுக்காக பேருந்துகளை இயக்கச் சொல்ல வேண்டுமே தவிர அவர்களின் போராட்டத்தை தொடர வழிவகுக்கக்கூடாது என்று தெரிவித்தபோது எல்லா தொழிற்சங்க

வழக்குரைஞர்களும் தெரிவித்த ஒரே கருத்து போராட்டம் இப்போது எங்கள் கையில் இல்லை. தொழிலாளர்கள் கைகளுக்கு போராட்டம் சென்றுவிட்டது. இந்த அரசாங்கம் அவர்களை பேச்சுவார்த்தைக்கு அழைக்க வேண்டும், ஊதிய ஒப்பந்தத்தை மாற்றி அமைக்க வேண்டும் இவற்றை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்காதவரை அவர்கள் யார் சொல்லியும் வேலைக்கு திரும்புவதாக இல்லை என்று தெரிவித்தனர்.

குறைந்தபட்ச தொழிலாளர்களே வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டிருப்பதாகவும், அவர்கள் பிற தொழிலாளர்களை வேலைக்கு செல்லவிடாமல் மிரட்டி வருவதாகவும் அட்வகேட் ஜெனரல் கூறிய கருத்துக்கு எதிர்கருத்தாக, அத்தகைய நிகழ்வு நடந்திருந்தால் சம்பந்தப்பட்ட தொழிலாளர்கள் நிச்சயம் கைது செய்யப்பட்டிருப்பார்கள். அந்த தகவலை அட்வகேட் ஜெனரல் வழங்கியிருப்பார். இதுவரை எந்த தகவலும் இல்லாதது அரசு வழக்குரைஞரின் வாதம் அடிப்படையற்றது என்பதை காட்டுவதாகும் என்றனர் தொழிற்சங்க வழக்குரைஞர்கள். மூத்த வழக்குரைஞர் திரு.என்.ஜி.ஆர். பிரசாத் அவர்கள், பொதுமக்கள் நலன்கருதி, தற்போது போடப்பட்டிருக்கும் ஊதிய ஒப்பந்தத்தை ரத்து செய்துவிட்டு மீண்டும் அரசு பேச்சுவார்த்தை நடத்துவதற்கு அரசுக்கு எது தடையாக உள்ளது? என்றும் மாண்புமிகு நீதிமன்றம் அரசை இதை செய்யச்சொல்லி உத்தரவிடலாமே என்றும் வாதிட்டார். இன்னொரு மூத்த வழக்குரைஞர் திரு.பிரகாஷ் அவர்கள், அரசாங்கம் இனிமேல் போக்குவரத்து தொழிலாளர்களுடன் பேச்சுவார்த்தை கிடையாது என்றும் 2.44 காரணியை எக்காரணம் கொண்டும் மாற்றமுடியாது என்றும் முரண்டு பிடிக்கும் நிலையில் தொழிலாளர்கள் எப்படி பணிக்கு திரும்புவார்கள். பொதுமக்கள் நலனை அரசு கவனத்தில் கொண்டிருந்தால் பெரும்பாலான தொழிற்சங்கங்களின் ஒப்பதல் இல்லாமலேயே 4.1.2018ம் தேதி ஊதிய ஒப்பந்த அறிவிப்பை வெளியிட்டிருக்க மாட்டார்கள் என்றும் எனவே அரசே பொதுமக்கள் நலன் மீது அக்கறை காட்டவில்லை என்றும் வாதுரைத்தார்.

இரண்டு நாட்களுக்கும் மேலாக நடந்த பலமணிநேர விவாதங்களுக்குப் பிறகு நீதிபதிகள் ஊதிய ஒப்பந்தத்தில் எழுந்துள்ள வித்தியாச காரணியைப் பொறுத்து முடிவெடுக்க ஓய்வுபெற்ற உயர்நீதிமன்ற நீதிபதி ஒருவரை மத்தியஸ்தராக நியமிக்கலாம் என்ற முடிவுக்கு வந்தனர். இந்த முடிவை அனைத்து வழக்குரைஞர்களும் ஏற்றனர். அதே சமயம் அந்த மத்தியஸ்தர் போக்குவரத்து தொழிலாளர்களின் மற்ற பிரச்னைகளையும் பரிசீலிக்க உத்தரவிட வேண்டும் என்றும் கோரப்பட்டது. அரசு வழக்குரைஞரும் அரசாங்கத்தின் ஒப்புதல் பெற்று இந்த மத்தியஸ்தர் ஏற்பாட்டுக்கு ஒப்புக்கொண்டார்.

போராட்டத்தின் வேகத்தையும், வலிமையையும் வழக்குரைஞர்களின் வாதத்தின் முலம் உணர்ந்து கொண்ட நீதிபதிகள் தடை உத்தரவை மீறி வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதற்காக தொடர தயாராக வைக்கப்பட்டிருந்த நீதிமன்ற அவமதிப்பு வழக்கை பட்டியலிட உத்தரவிடவில்லை என்பதும், ஊதிய ஒப்பந்தம் குறித்து பொதுவான ஒரு மத்தியஸ்தரிடம் விசாரணைக்கு உத்தரவிட்ட நிகழ்வும் வக்கீல்களின் வாதத்திறமையால் மட்டும் ஏற்பட்டதல்ல, அது போக்குவரத்து தொழிலாளர்களின் உறுதியான போராட்டத்திற்கு கிடைத்த வெற்றியாகவே பார்க்க வைத்துள்ளது. போக்குவரத்து தொழிலாளர்களின் போராட்டம் சில புதிய விஷயங்களை உணர்த்தியிருக்கிறது,

போராட்டங்களின் நியாயங்களையும், வலிமைகளையும் உணராமல் ஒருதலைப்பட்ச தடை உத்தரவு வழங்க நீதிமன்றங்கள் இனி சிந்திக்கும். தீவிரமான, அடர்த்தியான, உறுதியான, வலிமை மிக்க போராட்டங்களே இனி நீதிமன்றத்திற்கு உள்ளேயும் வெளியேயும் உரிமைகளை தாங்கிப் பிடிக்கும், தக்க வைக்கும் என்பதை அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் முதற்கொண்டுஅனைத்து தொழிலாளர்களுக்கும், தொழிற்சங்கங்களுக்கும் உணர்த்தியுள்ளது.

ஏல்லாவற்றையும் விட,

பெரும்பான்மை தொழிலாளர்கள் தூக்கிப்பிடிக்கும் நியாயமான உரிமைகளுக்கான போராட்டங்கள் என்ற பட்டாகத்திகள் முன்பு நீதிமன்றத் தடை உத்தரவுகள் வெறும் அட்டைகத்திகளே என்பது உரிமைக்காக போராடும் ஒவ்வொரு உழைக்கும் வர்க்கத்தினருக்குமான செய்தியாக மலர்ந்திருக்கிறது.

ஆக, கூர்மையான பட்டாகத்திகள் (போராட்டங்கள்) கையில் உள்ளவரை நேர்மையான உரிமைகளுக்கான பாதுகாப்பு உத்தவாதப் பட்டிருக்கும் என்பதே புதிய செய்தி. புதிய செய்தியே புரட்சியின் வரலாறு. ❖

# போக்குவரத்து போராட்டத்தில் நீதித்துறை தலையீடு நியாயமா?

**சென்னை உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதியரசர் ஹரிபரந்தாமன்**



தமிழக அரசின் 8 போக்குவரத்து கழகங்கள் தமிழகம்முழுவதும் பேருந்துகளை இயக்கு கின்றன. அநேகமாக, அனைத்து கிராமங் களுக்கும்கூட இப்பேருந்துகள் செல்கின்றன. இதில் பயணிகளின் நலனுக்காக பேருந்துகள் இயக்கப்படுகின்றனவே அன்றி லாபநோக்கத்திற் காக அல்ல. மாணவர்களுக்கு, மாற்றுத்திறனாளி களுக்கு, முதியோருக்கு பயண கட்டணத்தில் சிறப்புசலுகை அளிக்கப்படுகிறது. இதனால் நட்டம் தான்ஏற்படும். ஆனால் மக்கள் நலனுக் காக அரசு பேருந்துகளைஅரசு இயக்குகிறது. எனவே போக்கு வரத்து கழகங்களுக்கு ஏற்படும் நட்டத்திற்கு அரசு நிதி உதவி செய்யவேண்டும். தனியார் பேருந்துகள் இயக்கப்படுவது லாபநோக்கத்திற்காக மட் டுமே.இதுபோன்ற ஒரு சேவை இந்தியாவின் எந்த மாநிலத்திலும் கிடையாது. சுமார் 1,50,000 தொழிலாளர்கள் இக்கழகங்களில் பணி புரிகின்றனர்.

குறிப்பாக, 2015ஆம் ஆண்டில் கடும் வெள்ளம் வந்தபோது தனியார் பேருந்துகள் அதன் இயக் கத்தை நிறுத்திவிட்டன. பேருந்துக்கு இழப்பு ஏற்படும் என்பதே காரணம்.ஆனால் மேற்சொன்ன அரசு பேருந்துகள் வெள்ளப் பகுதிகளிலும் இயக்கப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களுக்கு பேருதவிசெய்ததை அனைவரும் அறிவர். இப்படி செய்த பணிக்காக அரசு போக்குவரத்து கழக தொழிலாளர்கள் பாராட்டுக்குரியவர்கள். தமிழக அரசும் பாராட்டுக்குரியதே.அதேபோல, 2016 ரூ ஆம் ஆண்டு வர்தா புயலால் தமிழகம் பாதிக்கப்பட்டபோதும், அரசு போக்குவரத்து கழகதொழிலாளர்கள் பேருந்துகளை இயக்கி னார்கள். அவர்களின் சேவை பாராட்டுக்குரியது. தமிழக அரசும் பாராட்டுக்குரியதே.கையாடல் என்ற குற்றச்செயல்ஆனால் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு கடும்அநீதியை அரசும், போக்குவரத்து கழகங்களும் இழைக்கின்றன. தொழிலாளர்களின் சம்பளத்திலிருந்து பிடிக்கப் படும் வருங்கால வைப்புநிதி கோடிக்கணக்கில் நிதியத்தில் செலுத்தவில்லை. அதேபோல ஆயுள் காப்பீட்டு கழகத்திற்காக சம்பளத்திலிருந்து பிடிக் கப்பட்டும் அக்கழகத்திற்கு செலுத்தவில்லை. இவ்விதம் செலுத்தப்படாத தொகை ரூபாய் 6,000 (ஆறாயிரம்) கோடிக்கும் மேல்.இதனால், தொழிலாளர்கள் பெரும் பாதிப்புக்கு உள்ளா கின்றனர். அவர்களின் பணத்தில் இருந்து கல்விக் காக, திருமணத்திற்காக, மருத்துவ செலவிற்காக கடன்பெறுவதற்கு வாய்ப்பில்லாமல் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். சம்பளத்தில் பிடித்தபின் செலுத்தாமல் இருப்பது ஒரு குற்றச் செயல் ஆகும். அதாவது அது ஒரு மோசடியானகையாடல் ஆகும். ரூபாய் 2-க்கு பயணச் சீட்டு தரவில்லைஎன்றும் அந்த ரூபாய் 2 கையாடல் செய்ததாகவும் நூற்றுக்கணக்கில் - ஏன் ஆயிரக் கணக்கில் - நடத்துநரை வேலை நீக்கம் செய்கிறது இந்த போக்கு வரத்து கழகங்கள். இந்த தொழி லாளர்களும் அவர்களது குடும் பங்களும் நடுத்தெருவில் நிற்கின்றன. 6,000 கோடிக்கும் மேல் கையாடல் செய்த நிர்வாகத்திற்கு எந்த தண்டனை கொடுக் கப்பட்டுள்ளது? நான் வழக்குரைஞராக இருந்த போது, இது போல் கோடிக்கணக்கில் தொழி லாளர்களின் சம்பளத்தில் இருந்து பிடித்த பணம் உரிய நிதியத்தில் செலுத்தப்படவில்லை என்றும், இது கையாடல் என்ற குற்றச்செயல் என்றும் தொழிற் சங்கத்தின் சார்பாக வழக்கு போட் டுள்ளேன்.

அப்போதெல்லாம் போக்குவரத்து கழகங்கள் நட்டத்தில் இயங்குவதாக கூறுவதை ஏற்று அக்கழகங்களுக்கு தவணை முறையில் செலுத்த உயர் நீதிதிமன்றம் சலுகை காண்பித்து உத்தர விடும். அந்த சலுகையைக்கூட மதிக்காமல் உயர்நீதிமன்றம் போட்ட உத்தரவின்படி தவணை தொகைகளை செலுத்துவதில்லை. இதற்காக நீதிமன்ற அவதூறு வழக்கை போடும்போதும் போக்குவரத்து கழகங்களின் எந்த உயர் அதிகாரி யும் சிறைக்கு சென்றதில்லை. ஆனால், சொற்ப தொகைக்கான பயணச் சீட்டு அளிக்காமல் நடத்துநர் கையாடல் செய்தார் என்ற வழக்கு களில், இந்த தொழிலாளர்களின் வேலை நீக்கம்

சரி என்றே நீதிமன்றங்கள் கூறுகிறது. பொதுப் பணத்தை கையாடல் செய்ததாக குற்றச்சாட்டு எழும்போது கையாடல் செய்த தொகை சொற்பமானதா, அதிகமானதா என்றெல்லாம் பார்க்கக்கூடாது என்று நீதிமன்றம் நியாயம் பேசுகிறது. இந்த நாட்டில் ரூ.1000 கோடிக்குமேல் வங்கியில் பெற்றபணத்தை திருப்பி செலுத்தாமல் ஓட்டம் பிடித்த விஜய் மல்லையாக்களும் லலித் மோடிகளும் வெளிநாட்டில் வசதியுடன் வாழ்கின்றனர். லலித் மோடியின் மனைவிக்கு உடல்நலக் குறைவு என்றபோது வெளிநாட்டு மருத்துவமனையில் மருத்துவம் பார்ப்பதற்கு மனிதாபிமான அடிப்படையில் மத்திய மந்திரி சுஷ்மா சுவராஜ் உதவி செய்வார். பணி ஓய்வு பெற்றபின் போக்குவரத்து தொழிலாளர்களுக்கு சேர வேண்டிய ஓய்வூதிய பலன்கள் பல ஆண்டுகள் ஆனாலும் வழங்கப்படவில்லை. இது சட்ட விரோதமானது. இதுவும் ஒரு கையாடல் வகையை சேர்ந்ததே. இந்ததொழிலாளர்கள் உயர்நீதி மன்றம் சென்று வழக்கு போட நிர்ப்பந்திக்கப்படுகிறார்கள். வழக்கு போடும் போது உயர்நீதிமன்றம் தவணை முறையில் ஓய்வூதியத்தை அளிக்குமாறு கூறி உத்தரவு போடுகிறது. இங்கும் இந்த போக்குவரத்து கழகங்களுக்கு இப்படி சலுகைகள் வழங்கப்படு கிறது. இந்த தவணை தொகையும் நீதிமன்ற உத்தரவுப்படி கொடுப்பதில்லை.ஆயிரக்கணக்கில் தொழிலாளர்கள் ரிட் மனுக்கள் தாக்கல் செய்து ஓய்வூதிய பலன்கள் கேட்கும்போது, உயர்நீதி மன்றம் தானாக முன்வந்து ஒரு பொதுநல வழக்கை பதிவு செய்து, அரசு ஓய்வூதிய பலன் களை அளிக்கவேண்டும் என்று கூறியிருந்தால் நன்றாக இருந்திருக்கும்.ஓய்வு பெற்ற தொழி லாளர்கள் லட்சக்கணக்கில் வழக்கிற்காக செலவு செய்ய வேண்டிய நிலை ஏற்படாது.மேலும் ஜுன் 2017-க்கு பின்னர் ஓய்வுபெற்ற சுமார் 3000 தொழிலாளர்களின் ஓய்வூதிய தொகை இன்று வரை அளிக்கப்படவில்லை.

இது சுமார் ரூபாய் 400 கோடியாகும்.கார் ஓட்டுநருக்கும் கீழான ஊதியம்போக்குவரத்து தொழிலாளர்களின் ஊதியம், தொழில்தகராறு சட்டத்தின் கீழ் போடப்படும் ஒப்பந்தங்களால் தீர்மானிக்கப்படுகிறது. இறுதியாக போட்ட ஒப்பந்தம் 31.08.2016 அன்று முடிவுக்கு வந்தது. அதற்கு பின் புதிய ஒப்பந்தம் போட்டு ஊதிய உயர்வு கொடுக்கப்பட வேண்டும். ஒப்பந்தம் காலாவதியானதும் தொழிற்சங்கங்கள் ஊதிய உயர்வு சம்பந்தமான கோரிக்கைகளை உடனே சமர்ப்பித்தன. அதில் தமிழக அரசின் கீழ் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும், பொதுத் துறை நிறுவனங்களில் பணிபுரியும் ஓட்டுநர்களுக்கும் வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையான ஊதியம் வழங்கப்பட வேண்டும் என்று கோரப் பட்டது. போக்குவரத்து கழக ஓட்டுநர்கள் கனரக வாகனமான பேருந்தை ஓட்டுபவர்கள். இவர் களுக்கு அரசின் கீழ் பணிபுரியும் இலகுரக வாகனமான மகிழுந்தை ஓட்டும் ஓட்டுநர்களுக் கான ஊதியத்தை விடகுறைவாக தரப்படுகிறது. ஓய்வூதிய பலன்களையும் ஓய்வூதியத்தையும் போக்குவரத்து கழகங்கள் கோடிக்கணக்கில் கொடுக்காமல் இருப்பதால் ஓய்வூதியம் தரும் பொறுப்பை அரசே எடுத்துக்கொள்ள வேண்டும் என்றும் கோரிக்கை வைக்கப்பட்டது. 01.04.2003க்கு பின்னர் சேரும் தொழிலாளர் களுக்கும் ஓய்வூதியம் வழங்க கோரப்பட்டது. கோடிக்கணக்கில் தொழிலாளர்களிடம் இருந்து பிடித்த பணத்தை உடனே செலுத்த வேண்டும் என்று கோரப்பட்டது.

ஓய்வூதிய பலன்கள் கிடைக்காமல் இருக்கும் ஆயிரக்கணக்கான தொழிலாளர்களுக்கு உடனே ஓய்வூதிய பலன்கள் அளிக்க வேண்டும்என்று கோரப்பட்டது.இந்த கோரிக்கைகள் சம்பந்தமாக புதிய ஒப்பந்தம் ஏற்படுவதற்காக அரசும், கழக நிர்வாகமும் எந்த பேச்சுவார்த்தையும் நடத்த வில்லை. ஒவ்வொரு ஒப்பந்தம் ஏற்படும்போதும் போக்குவரத்து அமைச்சர் அதற்கான பேச்சு வார்த்தைகளில் கலந்து கொள்வார். இறுதியில் ஏற்படும் ஒப்பந்தம் தமிழக அரசின் தொழிலாளர் இலாக்காவின் சமரச அதிகாரியின் முன் கையெழுத்தாகும். இந்த சமரச அதிகாரி தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் நியமிக்கப்பட்ட சமரச அதிகாரி ஆவார். இந்த சமரச அதிகாரி முன் ஏற்படும் ஒப்பந்தம் அனைத்து தொழிலாளர் களையும் கட்டுப்படுத்தும். புதிய ஒப்பந்தம் சம்பந்தமாக எந்த முன்னேற்றமும் ஏற்படாத நிலையில் 15.05.2017 அன்று புதிய ஒப்பந்தம் காண வேண்டி வேலை நிறுத்தம் தொடங்கினர். உடனே மதுரை உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு போடப்பட்டது.

போக்குவரத்து கழக தொழிலாளர் வேலை நிறுத்தத்தால் மக்கள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர் என்றும் எனவே வேலை நிறுத்தத்தை தடை செய்யுமாறும் அந்த வழக்கில் கோரப்பட்டது. நீதிமன்றமும் தடை வழங்கியது.

சம்பந்தப்பட்ட தொழிற் சங்கங்களை கேட்காமலே ஒருதலைப்பட்சமாக தடை உத்தரவு வழங்கப் பட்டது.போக்குவரத்து கழக தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தை ஒட்டி 16.05.2017 அன்று ஒரு புரிந்துணர்வு ஒப்பந்தம் ஏற்பட்டது. அதில் மூன்று மாதத்திற்குள் பிரச்சனைகளை பேசி தீர்த்து ஒப்பந்தம் காண்பது என்று முடிவானது. அதில் அரசு ரூபாய் 500 கோடி நிதியை உடனடியாக அளித்தது.

ஓய்வு பெற்ற தொழிலாளர்களின் ஓய்வூதி யத்தை செப்டம்பர் 2017-க்குள் கொடுப்பதாக அரசு ஒப்புக்கொண்டது. எனவே தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை விலக்கி கொண்டனர். உயர்நீதிமன்றம் விசாரிக்க முடியுமா? பணி நிலைமை சம்பந்தமான விஷயங்களில் பொதுநல வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்று உச்ச நீதிமன்றம் கூறியுள்ளது. தமிழக அரசின் கலை மற்றும் அறிவியல் கல்லூரிகளில் 2000-க்கும் மேற்பட்ட உதவி பேராசிரியர் காலி இடங்களை நிரப்ப நடவடிக்கை எடுத்தபோது, புதிய தமிழகத் தின் தலைவர் கிருஷ்ணசாமி அவர்கள் தாழ்த்தப் பட்டோர்களுக்கான பல வருடங்களாக நிரப்பப் படாத இடங்களை நிரப்பியபின்தான் மீதி இடங்கள் நிரப்பப்படவேண்டும் என்று உயர் நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு தொடுத்தார்.

இதை விசாரித்த நீதிபதி திரு. முகோபாத்தியாய அவர்களின் தலைமையிலான இரு நீதிபதிகள் அமர்வு பொதுநல வழக்கைதள்ளுபடி செய்தது. பணி சம்பந்தமான விவகாரங்களில் பொதுநல வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்ற சட்டநிலைமையை கூறி தள்ளுபடி செய்தது. அப்படி என்றால், தொழிலாளர்களோ / ஊழியர் களோ வேலை நிறுத்தம் செய்வது சம்பந்தமாக பொது நல வழக்கை உயர் நீதிமன்றம் விசாரிக்க முடியுமா? வேலை நிறுத்தம் செய்யும் தொழி லாளர்கள் / ஊழியர்கள் சம்பந்தமாக சம்பந்தப் பட்ட முதலாளிகள் / நிர்வாகம் சட்டப்படி எந்த நடவடிக்கையும் எடுத்துக்கொள்ளட்டும். தொழி லாளர்களுக்கும் நிர்வாகங்களுக்கும் ஏற்படும் பிரச்சனைகள், தாவாக்கள் வேலை நிறுத்த மாகவோ, கதவடைப்பாகவோ முடிவடையும் நேரங்களில் சம்பந்தப்பட்ட தரப்பினர் தொழிற் தகராறு சட்டத்தின் கீழ் உரிய நிவாரணம் தேடிக்கொள்வார்கள்.தொழிலாளர்களின் வேலை நிறுத்தம் சட்ட விரோதமானதெனில் அவர்களை சம்பந்தப்பட்ட நிர்வாகம் (இங்கு போக்குவரத்து கழகங்கள்) வேலைநீக்கம் கூட செய்யட்டும். அதை தொழிலாளர்கள் எதிர்கொள்வர்.

அந்தவேலை நீக்கத்தை எதிர்த்து சட்ட ரீதியான நடவடிக்கையை தொழிலாளர்கள் மேற்கொள்வர். உரிய நீதிமன்றத்தை அணுகுவர். அப்போது நீதிமன்றம் சட்டப்படி என்னசெய்யவேண்டுமோ அதை செய்யட்டும். அத்தியாவசிய பணி பராமரிப்பு சட்டம் இருக்கிறது. அதன் கீழ் அரசு நடவடிக்கை எடுக்கட்டும். ஜெயலலிதா முதல் வராக இருந்தபோது இந்த சட்டத்தை பயன் படுத்தி போராடிய அரசு ஊழியர்கள் சுமார் 2,00,000 பேரை உடனேபணி நீக்கம் செய்தார். பின்னர் அவர்களுக்கு வேலை நீக்ககாலத்திற்கும், வேலை நிறுத்த காலத்திற்கும் முழு ஊதியத்தை யும் மீண்டும் பணிதொடர்ச்சியுடன் வேலையும் அளித்தார்.நெய்வேலி நிலக்கரி சுரங்க நிர்வாகம் ஒரு வழக்கைதாக்கல் செய்தது. நான் நீதிபதியாக இருந்த போது அந்தவழக்கு என் முன் விசாரணைக்கு வந்தது. அதில் தொழிலாளர்கள் சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவ தாகவும் அதற்கு தடை அளிக்குமாறும் கேட்டது.

பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன் வழக்கில் உயர் நீதிமன்ற நீதிபதி சந்துரு அவர்களின் தீர்ப்பை சுட்டி காண்பித்து, இதே போன்ற நிலைமையில் வழக்கை தள்ளுபடி செய்துள்ளார் என்றேன். பாரத் பெட்ரோலியம் கார்ப்பரேஷன், அவர்களின் தொழிலாளர்கள் சட்ட விரோத வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக கூறி அதற்கு தடை கோரி வழக்கு போட்டனர். நீதிபதி சந்துரு முன்பு அவ்வழக்கு விசாரணைக்கு வந்தது. அதில் விரிவான தீர்ப்பை அவர் அளித்துள்ளார். அதில் அவர் உச்சநீதிமன்ற தீர்ப்புகளையெல்லாம் மேற்கோள் காட்டியுள்ளார். சட்ட விரோதமாக வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவதாக கூறப்படும் தொழிலாளர்களின் மேல் நிர்வாகம் சட்டப்படி எந்த நடவடிக்கை வேண்டுமானாலும் எடுத்துக் கொள்ளலாம் என்றார். ஆனால் நிர்வாகம் வேலை நிறுத்தத்திற்கு எதிராக செயல்படும்படி உயர் நீதிமன்றத்தை துணைக்கு அழைக்க முடியாது என்றார். நீதிமன்றம் தொழிலாளர்களுக்கும், நிர்வாகத்திற்கும் நடுநிலையாக இருக்கும் என்றார். தொழிலாளர்களின் கூட்டுபேர சக்தியை முறியடிப்பதற்கு நீதிமன்றத்தின் துணையை நிர்வாகம் நாடமுடியாது என்றார். நெய்வேலியில் நடந்தது என்ன? நான் இதை சுட்டி காண்பித்து, நெய்வேலி நிலக்கரி சுரங்க நிர்வாகம் போட்ட வழக்கை தள்ளுபடி செய்யலாம் என்றாலும், வழக்கில் கட்சிகளாக சேர்க்கப்பட்டுள்ள தொழிற் சங்கங்களுக்கு நிர்வாகம் அறிவிப்பு அளிக்கும்படி

கூறி வழக்கை இரு வாரங்களுக்கு ஒத்தி வைத்தேன்.

வேலை நிறுத்தத்திற்கு தடை கொடுக்க மறுத்தேன். இரு வாரம் கழித்து நிர்வாகம் மற்றும் தொழிற்சங்கங்களின் வாதங்ககளை கேட்டு முடிவெடுப்பதாக கூறி உரிய உத்தரவு போட்டேன். அதற்கு மேல் நெய்வேலி நிலக்கரி சுரங்க நிர்வாகம் இருநீதிபதிகள் அமர்வு முன் மேல்முறையீடு செய்தது. அடுத்த நாளே மேல் முறையீட்டில் இரு நீதிபதிகள் அமர்வு மூலம் வேலை நிறுத்தத்திற்கு தடை உத்தரவு பெற்றது. ஆனால்தொழிலாளர்கள் தடை உத்தரவையும் மீறி போராட்டத்தை தொடர்ந்தனர். சுமார் 3 வாரங்கள் போராட்டம் நடந்ததும்நிர்வாகம் போராடிய தொழிலாளர்களுடன் ஒப்பந்தம் போட்டு பிரச்சனைக்கு முடிவு கண்டது. எனவே இரு நீதிபதிகள் அமர்வின் தடை உத்தரவிற்கு ஏற்பட்ட நிலை என்ன?போராடிய ஆயிரக்கணக்கான தொழிலாளர்களை நீதிமன்ற தீர்ப்பை அவமதித் தார்கள் என்று கூறி சிறைக்கு அனுப்ப முடியுமா? எனவே சந்துரு அவர்களின் தீர்ப்பே சரியானது என்று நான் கருதுகிறேன். தொழிலாளர்களை கேட்காமலே தடையா? ஆனால், இப்பொழுது போக்குவரத்து கழக தொழிலாளர்களின் சங்கங் களை கேட்காமலே உயர் நீதிமன்றத்தின் தலைமை நீதிபதியின் தலைமையிலான இரு நீதிபதிகள் அமர்வு 04.01.2018 முதல் போராடும் போக்கு வரத்து தொழிலாளர்களின் போராட்டத்திற்கு தடை விதித்துள்ளது. ஏன் இந்த போராட்டம்? ‘‘16.05.2017 தேதிய புரிந்துணர்வுஒப்பந்தப்படி அரசும் போக்குவரத்து கழகங்களும் செயல்பட வில்லை. எனவே, தொழிலாளர்களின் சங்கங்கள் 09.09.2017 அன்று இரு வாரங்களுக்கு பின்னர் வேலைநிறுத்தம் செய்யப்போவதாக அறிவிப்பு கொடுத்தன. இதனடிப்படையில் தொழிலாளர் இலாக்காவின் சமரச அதிகாரி 19.09.2017 அன்று போக்குவரத்து கழகங்களையும் தொழிற்சங்கங் களையும் பேச்சுவார்த்தைக்கு அழைத்தார். வேலை நிறுத்தத்தை தவிர்க்க சொன்னார். போக்குவரத்து மந்திரியும் பேச்சுவார்த்தை நடத்தலாம் என்றார். எனவே வேலைநிறுத்தம் நடைபெறவில்லை. 27.09.2017 அன்று போக்கு வரத்து மந்திரிக்கும், தொழிற்சங்கங்களுக்கும் பேச்சுவார்த்தை நடந்தது. இடைக்கால நிவாரண மாக ரூபாய் 1200 கொடுப்பதற்கும் ஒவ்வொரு பேச்சுவார்த்தையின்போதும் ஒரு உப குழு தொழிற் சங்கங்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுக்கு வந்து, இறுதியில் ஒப்பந்தம் ஏற்படுவது போல் உப குழு அமைத்து அதனுடன் பேச முடிவானது. உப குழுவுடன் பலப் பல சுற்றுகள் பேச்சுவார்த்தை நடந்தது. அதில் தொழிற் சங்கங்கள், அரசு ஒட்டுநருக்கு இணையான ஊதியத்தை வலியுறுத்தின. இறுதியில் அதற்கு மாற்றாக மூன்றால் பெருக்கிவரும் தொகையை அளிக்குமாறு கேட்டது.

நிர்வாகம் 2.44-னால் பெருக்கி வருகின்ற தொகை அளிக்கஒப்புக்கொண்டது. தொழி லாளர்கள் மூன்றுக்கு பதிலாக 2.87 க்கு இறங்கி வந்து இறுதியில் 2.57ஆல் பெருக்கி வரும் தொகையை அளித்தால் ஒப்புக்கொள்வதாக கூறினர். துரோக ஒப்பந்தம் இந்நிலையில் 03.01.2018 அன்று பல்லவன் இல்லத்தில் நடந்த பேச்சுவார்த்தையில் மேற்சொன்ன அளவிற்கு நிலைமை இருந்தபோது அன்று தொழிலாளர் இலாக்காவின் சமரச அதிகாரி பல்லவன் இல்லத் திற்கு அரசால் அழைக்கப்பட்டார். அவர் முன்னிலையில் 2.44 பெருக்கல் தொகை சம்பந்தமான ஒப்பந்தம் அ.தி.மு.க தொழிற் சங்கத்துடனும் சில தொழிற்சங்கங்களுடனும் கையெழுத்தானது. மிக பெரும்பான்மையான தொழிலாளர்களை உறுப்பினர்களாக கொண்ட தொழிற்சங்கங்கள் புறக்கணிக்கப்பட்டன.எது சட்ட விரோதம்?

தொழிலாளர் இலாக்காவின் சமரச அதிகாரி, அதிமுகஅரசின் சொல்படி இயங்குபவராக மாறினார். சமரச அதிகாரி சமரச பேச்சுவார்த்தை ஏதும் நடத்தவில்லை. 03.01.2018 அன்று சமரச பேச்சுவார்த்தை நடைபெறும் என்று ஏதும் கூற வில்லை. அதற்கான அறிவிப்பு அனுப்பவில்லை. அப்படியே நடந்தாலும் அது தொழிலாளர் இலாக்காவின் அலுவலகத்தில் அல்லவா நடைபெற வேண்டும்? சமரச அதிகாரி முன் போடப்பட்ட ஒப்பந்தம் அனைத்து தொழிலாளர் களையும் கட்டுப்படுத்தும். எனவே, சட்ட விரோதமான, ஜனநாயக விரோதமான தமிழக அரசின் இச்செயலை கண்டித்தே போக்குவரத்து தொழிலாளர்கள் 04.01.2018 முதல் போராட்டத்தில் இறங்கினர். மிக பெரும்பான்மை தொழி லாளர்கள் போராடுவதே மேற்சொன்ன ஒப்பந்தம் மோசடியானது என்பதை தெளிவுபடுத்தும். சட்ட விரோதமாக செயல்பட்டஅரசைக் கண்டிக்காமல் தொழிலாளர்களை கண்டிப்பது சரிதானா? சட்ட விரோதமாக தொழிலாளர்கள் போராடுவதாக அரசு கருதினால், அரசு அவர்களை வேலை நீக்கம்

கூட செய்யட்டும். அதை தொழிலாளர்கள் எதிர் கொள்வர். ஆனால் வேலை நிறுத்த போராட்டத்தில் ஈடுபடும் தொழிலாளர்கள் வேலை நீக்கம் செய்யப்படுவார்கள் என்பதும், வேலை நிறுத்தத்தை தொடர்ந்தால் நீதிமன்ற அவமதிப்பு நடவடிக்கை எதிர்கொள்ள நேரிடும் என்றும் உயர் நீதிமன்றம் கூறுவது சரியா? தொழிலாளர்கள் வேலை நிறுத்தத்தை தொடர்ந்து செய்து வருகின்றனர்.

லட்சக்கணக்கான தொழிலாளர்களை நீதி மன்றம் சிறையில் அடைக்கப் போகிறதா? அல்லது நீதிபதி சந்துரு அவர்களின் தீர்ப்பை ஒட்டி நிர்வாகம் தொழிலாளர்களின் பிரச்சனை களை நீதிமன்றம் தலையிடாது என்றும் வேலை நிறுத்தத்தை எதிர்ப்பதற்கு நீதிமன்றத்தின் துணையை நாட முடியாது என்று கூறப்போகிறதா? நீதிபதி சந்துருவின் தீர்ப்பை ஒட்டி செயல்படு வதே சரியாக இருக்கும் என்பது என் கருத்து. ❖

## போக்குவரத்துத்துறையில் ஏற்பட்ட நட்டத்தை சரிக்கட்ட பொதுமக்கள் தலையில் பாறாங்கல்லை வைப்பதா?

தமிழக அரசு போக்குவரத்து கட்டணங்களை தடலாடியாக எந்தவித முன்னறிவிப்புமின்றி உயர்த்தியுள்ளதால் ஏழைகளும் நடுத்தர மக்களும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர். உரிய காலஅவகாசம் கொடுக்காமல் பேருந்து கட்டணங்களை உயர்த்தியதால் பொதுமக்களில் பலபேர் பேருந்து கட்டணங் களுக்குத் தேவையான பணமின்றி கஷ்டப்படுவதை தமிழ்நாடு முழுவதும் கண்டுவருகிறேம். கட்டணத்தை திடீரென்று உயர்த்தியதோடு மட்டுமல்லாமல் ஒரு நாள் பயணச்சீட்டு ரூ.50/-க்கானதை கொடுக்காமல் நிறுத்தியதாலும், போக்குவரத்து ஊழியர்களுக்கே, விலை உயர்த்தப்பட்ட ஒரு நாள் பயணச்சீட்டு உண்டா இல்லையா என்பது தெரியாததாலும் அவர்களாலும் அதுகுறித்து பொதுமக்களுக்கு தெளிவாக விளக்க முடியவில்லை. போதாக்குறைக்கு மாதாந்திர பயணச்சீட்டு (பாஸ்) வாங்கியவர்களை பேருந்தில் பயணம் செய்ய அனுமதிக்கலாமா இல்லையா என்பது குறித்தும் போக்குவரத்துத் துறையிடமிருந்து எந்தவித அறிவிப்பும் இல்லாததால் பல இடங்களில் பேருந்து நடத்துனர்கள் என்ன செய்வதென்று தெரியாமல் திகைத்து நின்றதும் நடந்தது. மாணவர்களின் மாதாந்திர பாஸ்களைப் பொறுத்தும் இதே குழப்படிதான் இருந்தது.

எதற்காக இவ்வளவு கட்டண உயர்வு என்று யாராவது கேள்வி கேட்டுவிடப்போகிறார்களே என்று அவசரகதியில் அள்ளித் தெளித்த கோலமாக இந்த கட்டண உயர்வு அறிவிக்கப்பட்டுள்ளது. ஏழை மற்றும் நடுத்தர மக்கள் இவ்வளவு உயர்வை தாங்குவார்களா என்று தமிழக அரசு எண்ணிப் பார்த்ததாக தெரியவில்லை. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டிருக்கும் நட்டத்தை சரிபடுத்துவதற்கு போக்குவரத்து கட்டணங்களை உயர்த்தித்தான் சரி செய்ய வேண்டும் என்ற நோக்கில் மட்டுமே இந்தக் கட்டணங்கள் உயர்த்தப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. போக்குவரத்துத் துறையில் ஏற்பட்டிருக்கும் நஷ்டங்களை சரி செய்வதற்கு வேறு வழிகளை ஆராயாமல் அனைத்தையும் பொதுமக்கள் தலையிலேயே கட்டி ஏழைகளையும் நடுத்தர மக்களையும் அதற்கு இலக்காக்கி இருப்பது பெருத்த கண்டனத்திற்குரியதாகும்.

போக்குவரத்து துறையில் மலிந்திருக்கும் ஊழல்கள், தளவாட சாமான்கள் வாங்குவதில் பெறப்படும் கமிஷன்கள், பராமரிப்பு செலவில் காட்டப்படாத சிக்கனங்கள் போன்ற பலவழிகளில் கசியும் ஓட்டைகளை அடைத்தாலே போக்குவரத்து துறையில் ஏற்படும் நட்டங்களைத் தவிர்க்க முடியும். திறமையான நிர்வாகம் என்பது போக்குவரத்துத் துறையில் உள்ள அனைத்து இண்டு இடுக்குகளையும் செம்மைபடுத்தி சீர்படுத்த வேண்டிய ஒன்று. ஆனால் அது மற்றவைகளை சரிபடுத்தாமல் அனைத்து நட்டங்களையும் பொதுமக்கள் தலையில் சுமத்துவது சரியான நடைமுறையாக இருக்காது. பேருந்து கட்டண உயர்வுகள் மக்கள் தாங்கக்கூடிய அளவுக்கு இருக்க வேண்டிய அளவுக்கு இருக்க வேண்டுமே ஒழிய அதுவே மக்களுக்கு சுமையாக மாறாமல் பார்த்துக்கொள்ள வேண்டியது மக்கள் நல அரசின் கடமையாகும்.

ஆறுவருடங்களாக பஸ்கட்டணம் உயர்த்தப்படவில்லை என்றும் மற்ற மாநிலங்களின் பேருந்து கட்டணங்களை ஒப்பீடு செய்தும் அறிக்கை வெளியிட்டுள்ள போக்குவரத்துத்துறை அத்துறையில் நடந்துள்ள ஊழல்களால் ஏற்பட்டுள்ள இழப்புகளையும் பட்டியலிட்டிருந்தால் அது நேர்மையான அறிக்கையாக இருந்திருக்கும். எல்லா நட்டங்களுக்கும் பொது மக்களை பலிகடா ஆக்குவது மக்கள் நலனில் அக்கறை உள்ள அரசு செய்கின்ற காரியமில்லை. நடப்பது மக்கள் நல அரசாங்கமா அல்லது தனியார் நிறுவனமா என்ற கேள்வி இந்த கடுமையான பேருந்து கட்டண உயர்வின் மூலம் எழுந்துள்ளது.

எனவே, அதிகார வர்க்கத்திடம் நிர்வாகத்தை ஒப்படைத்து விட்டு ஓட்டை விழுந்த கப்பலில் பயணிக்கும் அமைச்சர்களும் எம்.எல்.ஏ.க்களும் கப்பல் மூழ்குவதற்குள் கண்விழித்துக் கொள்வது நல்லது. உடனடியாக பேருந்து கட்டணங்களைக் குறைத்து மக்களுக்கு சுமையில்லாத வகையில் பேருந்து கட்டணங்களை சீரமைக்க தமிழக முதல்வர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும். இல்லாவிட்டால் தமிழ்நாடு அரசு உழியர் சங்கம் பொதுமக்களைத் திரட்டி போராட்டம் நடத்தி பேருந்து கட்டணங்களை சீரமைக்க வழிகாணும். ❖

# ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடிமுட்டாள்கள் அல்ல!

# ஊரறிந்த உலுத்துப்போன ராஜதந்திரம் இனித் தேவையில்லை!!

### குறை தீர்க்கும் குழு அமைத்து குளறுபடிகள் ஏற்படுத்துவதைத் தவிர்த்து நேரடி விளக்கங்கள் மூலமாக ஊதிய முரண்பாடுகளை உடனடியாக களைய, அரசுக்கு, தமிழ்நாடு அரசு உழியர் சங்கம் வலியுறுத்தல்!!

அரசு ஊழியர்களுக்கு ஊதியங்கள் வரையறுக்கும் விஷயத்தில் தமிழக அரசு தொடர்ந்து பல குளறுபடிகளை வேண்டுமென்றே செய்வதும் அதை அரசு ஊழியர் சங்கமும் மற்ற சங்கங்களும் சுட்டிக்காட்டி போராட்டம் நடத்தினால், அதை சரி செய்வதற்காக குழுக்கள் அமைத்து கண்துடைப்பு நாடகம் நடத்தி மீண்டும் குளறுபடிகளுடன் அரசாணைகள் வெளியிடுவதும் கடந்த பத்தாண்டுகளுக்கும் மேலாக நடந்துவரும் நம்பிக்கை துரோகங்களாகும். ஊழியர் சங்கத் தலைவர்களுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்தி முரண்பாடுகளைக் களைய அரசை பலமுறை வலியுறுத்தியும், வற்புறுத்தியும் அரசு தன்னுடைய இயல்பு இதுதான் என்று மீண்டும் மீண்டும் உணர வைத்து வருகிறது. தற்போது 2018ஆம் ஆண்டின் கவர்னர் உரைமூலமாக, எடப்பாடி அரசு, தமிழக அரசு ஊழியர்களுக்கு சமீபத்தில் ஏற்படுத்தப்பட்டுள்ள ஊதிய மாற்ற முரண்பாடுகளை ஒப்புக்கொண்டு அதைக் களைய குழுக்கள் அமைக்கப்படும் என்று அறிவிப்பு செய்துள்ளது. கடந்த பதினோறு ஆண்டுகளாக ஊதிய மாற்ற முரண்பாடுகள் சம்பந்தமாக பல்வேறு குழுக்கள் அமைக்கப்பட்டும் அது காலங்களை விழுங்கி ஏப்பமிட்டதுதான் மிச்சம் என்பதும், அமைக்கப்பட்ட குழுக்கள் மேலும் மேலும் முரண்பாடுகளுடன் அறிக்கை தாக்கல் செய்தன என்பதும்தான் அரசு ஊழியர்கள் கண்டுவரும் வரலாறு.

ஊதிய மாற்றங்களில் முரண்பாடுகள் வரும் அளவுக்கு, அதுவும் தொடர்ந்து பதினோறு ஆண்டுகளாக முரண்களை தீர்க்க முடியாத அளவுக்கு, அதிலும், மேலும் மேலும் புதிய முரண்பாடுகளை ஏற்படுத்தும் அளவுக்கு, முரண்பாடுகளைக் களையும் குழுவின் தலைவர்களாக இருந்த ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் அடிமுட்டாள்களாக இருந்திருக்கிறார்கள் என்று எந்த அரசு ஊழியரும் நம்பத் தயாரில்லை. ஆக இது காலத்தை இழுத்தடித்து கழுத்தை அறுக்கும் நயவஞ்சக அரசின் நரித்தன வேலை என்பது வெட்ட வெளிச்சம். முரண்பாடுகள் உள்ள அளவுக்கு அரசாணைகள் வெளியிடுவதும் அதை சுட்டிக்காட்டி கோரிக்கைகள் வைத்து போராடிய பின்னர் ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் தலைமையில் குழுக்கள் அமைப்பதும், அவற்றின் காலவரைகளை நீட்டிப்பதும், காலத்தை இழுத்தடிக்காமல் குறித்த காலத்திற்குள் அறிக்கை தரச்சொல்லி ஊழியர் சங்கங்கள் போராட்டம் நடத்தினால் முரண்பாடுகளுடன் அரசாணைகள் வெளியிடுவதும் இப்போது ஊரறிந்த ராஜதந்திரமாக ஆகிவிட்டது. கடந்த பத்து வருடங்களில் ஊதிய மாற்ற முரண்பாடுகளைக் களைய அமைக்கப்பட்ட குழுக்களும் அவை அறிக்கை தர எடுத்துக்கொண்ட காலவரைகளையும் ஒருமுறை திரும்பிப் பார்த்தால் இந்த அரசாங்கம் அரசு ஊழியர்களுக்கு செய்து கொண்டிருக்கும் நம்பிக்கைத் துரோகங்கள் தெரியும்

1. மத்திய அரசு ஊழியர்களுக்கு 2008ம் ஆண்டு ஆகஸ்ட் மாதத்தில் ஊதிய மாற்றம் அறிவிக்கப்பட்டது. மத்திய அரசு ஊதிய மாற்றம் அறிவித்து ஒருமாதகாலம் கடந்த பின்னரும் தமிழக அரசு ஊழியர்களுக்கு அதனடிப்படையில் ஊதிய மாற்றம் மேற்கொள்ள ஊதிய மாற்றக் குழு அமைக்காததால் அதை அமைக்க கோட்டை நோக்கி பேரணி நடத்தி அதன்பிறகே ஊதிய மாற்றத்திற்கான அலுவலர் குழு அமைக்கப்பட்டது.

2. அனைத்து சங்கங்களின் கருத்துக்களையும் கேட்ட அலுவலர் குழு தன்னுடைய பரிந்துரையை 9 மாத காலஅவகாசத்திற்குப் பின் 2009 ஜூன் மாதம் வெளியிட்டது. அதனடிப்படையயில் வெளியிடப்பட்ட அரசாணைகளில் இருந்த ஊதிய முரண்களை சரிசெய்ய தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம், உடனடியாக சங்கத்தலைவர்களை நேரில் அழைத்துப் பேசி குறைகளை களைய அரசிடம் கோரிக்கை வைத்தது. ஆனால் அரசோ அதை செய்யாமல் 9.9.2009ல் ஒரு நபர் குழு அமைத்தது.

3. ஒரு நபர் குழு, சங்கங்கள் சுட்டிக்காட்டிய ஊதிய முரண்பாடுகளை அக்கறையுடன் கேட்பதாக பாசாங்கு செய்து அரசுக்கு பரிந்துரை அளிக்க 7 மாத கால அவசாசம் எடுத்துக் கொண்டது. தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் 1000 அலுவலகங்கள் முன்பு ஆர்ப்பாட்டம் நடத்திய பின் 24.4.2010ம் தேதி தனது அறிக்கையை அளித்தது.

4. அந்த அறிக்கையை ஆய்வு செய்வதாக கூறி அரசுத்தரப்பில் மேலும் நான்கு மாதங்கள் காலவிரயம் மேற்கொள்ளப்பட்டு 26.8.2010ம் தேதி ஒருநபர் குழுவின் பரிந்துரைகளை அப்படியே ஏற்பதாக கூறி மேலும் குளறுபடியான 87 அரசாணைகளை வெளியிட்டது அரசு.

5. ஒருநபர் குழுவின் பரிந்துரையின் அடிப்படையில் வெளியிடப்பட்ட அரசாணைகளால் ஏற்பட்டிருந்த குளறுபடிகளையும், பெரும்பான்மை ஊழியர்களுக்கு ஏற்பட்ட அநீதிகளையும் பலமுறை அரசிடம் எடுத்துரைத்தும் அரசு கண்டு கொள்ளாததால் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வெகுண்டெழுந்து 25.02.2011ஆம் தேதி புதிய தலைமைச் செயலகத்தை நோக்கி பேரணியாய் சென்று காவல்துறையின் காட்டுமிராண்டித்தனத்தை எதிர்கொண்டபின், அரசு, தான் வெளியிட்ட அரசாணைகளில் முரண்பாடுகள் இருப்பதாக ஒப்புக்கொண்டு ஊதியகுறை தீர்க்கும் குழு அமைத்தது.

6. புதிதாக அமைக்கப்பட்ட ஊதிய குறைதீர்க்கும் குழுவும் அந்தக் குழுவும் அனைத்து சங்கங்களையும் கூப்பிட்டு பேச முதலில் மறுத்து அதன்பிறகு அரசு ஊழியர் சங்கத்திலிருந்து கண்டனங்கள் கிளம்பியதன் பேரில் அனைத்து சங்கங்களையும்அழைத்துப் பேசி கருத்து கேட்டுக்கொண்டிருந்த நிலையில் 2011 தமிழக சட்டமன்ற தேர்தல் வந்தது. இதன்காரணமாக அரசு ஊழியர்கள் ஊதியமாற்றப் பிரச்சனைக்கு முடிவு எட்டப்படாமல் காலம் கடந்தது.

7. 2011ல் வந்த புதிய அரசாங்கத்திடம் ஊதிய முரண்பாடுகளை களைய நடவடிக்கை எடுக்க வேண்டும் என்ற அரசு ஊழியர் சங்கம் போராட்டம் நடத்திய பின்னர், புதிய குறை தீர்க்கும் குழு அமைக்கப்பட்டது.

8. அந்தக் குழுவிடமும் அனைத்து ஊழியர் சங்கங்களும் குறைகளை எடுத்துக் கூறிய பின்னரும் அரசுக்கு அறிக்கை வழங்காமல் கும்பகர்ண உறக்கத்தில் இரண்டாண்டுகள் இருந்ததால் அரசு ஊழியர் சங்கம் மீண்டும் போராட்டம் நடத்தியது. அந்தப் போராட்டத்தின் விளைவாக தமிழக அரசு 89 அரசாணைகளை 2013ல் வெளியிட்டது. இந்த அரசாணைகளிலும் குறைகளும் முரண்களும் களையப்படாத நிலையே தொடர்ந்தது.

9. அரசு ஊழியர்களின் நியாயமான போராட்டங்களை அரசு கண்டுகொள்ளாத நிலையில் காலவரையற்ற வேலைநிறுத்தம் 2016ல் அரசு ஊழியர் சங்கம் 10நாள் வேலைநிறுத்தப் போராட்டம் நடத்தியபின் அப்போதைய முதல்வர் செல்வி ஜெயலலிதா அவர்கள் சட்டசபையில் சட்டப்பேரவை விதி எண்.110ன் கீழ் வெளியிட்ட அறிக்கையில் 11 அறிவிப்புகள் செய்தார். அதில் சென்ற ஊதிய மாற்றத்தில் நிகழ்ந்த முரண்பாடுகள் எல்லாம் இந்த ஊதிய மாற்றத்தில் சரி செய்யப்படும் என்பதும் ஒன்று.

10. மத்திய அரசு ஊதிய மாற்றம் அறிவித்தபோது முதல்வர் ஜெயலலிதா மருத்துவனையில் இருந்ததால் ஊதியமாற்ற அலுவலர் குழு அமைக்கப்படவில்லை. அவர்மறைவுக்குப்பின்னர் தற்போதைய முதல்வர் பதவியேற்றபின் ஊதிய மாற்ற அலுவலர் குழு பிப்ரவரி 2017ல் அமைக்கப்பட்டது.

11. அந்தக் குழுவும் சங்கங்களிடமிருந்து பிரதிநிதிதுவங்களை பெற்றுக் கொண்டதே தவிர நேரடியாகப் பேசி முரண்பாடுகளை தீர்க்க முன்வராமலும் அறிக்கை தாக்கல் செய்யாமலும் இழுத்தடித்த நிலையில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் காலவரையற்ற போராட்டம் நடத்தியதும், நீதிமன்றத்தின் மூலமாக அரசுக்கு ஊதிய மாற்றம் ஏற்படுத்த காலக்கெடு விதித்த பின்னரே அரசு 21 மாதங்கள் கழித்து உதிய மாற்ற அரசாணைகளை வெளியிட்டதும் நாம் அறிந்ததே.

12. புதிய ஓய்வூதியத் திட்டத்தை திரும்பப் பெற அமைக்கப்பட்ட வல்லுநர் குழுவின் காலவரை நான்குமுறை நீட்டிப்பு செய்யப்பட்டதும் அது பிறகு கைவிடப்பட்டு தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் போராட்டத்தின் வாயிலாக மீண்டும் புதிதாக குழு அமைக்கப்பட்டு அதன் காலவரையும் 31.12.2018 தேதியோடு அறிக்கை பெறப்படாமலேயே முடிந்துள்ள நிலையில் ஐ.ஏ.எஸ்.அதிகாரிகள் தலைமையில் அமைக்கப்படும் குழுக்களின் தலையாய வேலை காலநீட்டிப்பு செய்வதும் முரண்பாடுகளுடன் அறிக்கை தாக்கல் செய்வதும்தான் என்பது வெட்ட வெளிச்சமாகியுள்ளது.

தற்போது நீதிமன்றத்தில் ஊதிய மாற்றம் குறித்த வழக்கு நிலுவையில் உள்ள போதே அரசாங்கம் ஊதிய மாற்றத்தில் குளறுபடிகள் உள்ளதாக கவர்னர் உரைமூலம் ஒப்புதல் வாக்குமூலம் தந்துள்ளதும் அதை சரிசெய்ய குழுக்கள் அமைக்கப்படும் என அறிவித்துள்ளதும் வெறும் கண்துடைப்பு நாடகம் தவிர வேறில்லை.

எனவே கவர்னர் உரையில் அறிவித்துள்ளபடி ஊதிய மாற்ற முரண்பாடுகளை களைய அமைக்கபடவுள்ள குழுவின் பேரில் அரசு ஊழியர்கள் ஆசிரியர்கள் யாருக்கும் நம்பிக்கையில்லை என்பதை இந்த அரசுக்கு நாங்கள் பகிரங்கமாக தெரிவிக்க கடமைப்பட்டுள்ளதுடன், முதல்வர் அவர்கள் ஊரறிந்த உலுத்துப்போன ராஜதந்திரத்தை இனியும் பயன்படுத்துவதை விட்டுவிட்டு சங்கத் தலைவர்களை நேரடியாக அழைத்து ஒரே மேசையில் தீர்வுகாண நேரடி ஊதிய முரண்பாட்டு விளக்கத்திற்கும் அதன் அடிப்படையில் முரண்பாடற்ற ஊதிய மாற்றம் ஏற்படுவதற்கும் நடிவடிக்கை எடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் வலியுறுத்துகிறது. மீண்டும் மீண்டும் குழுக்கள் அமைத்து கண்துடைப்பு நாடகங்கள் நடத்தும் போக்கும் இனியும் வேண்டாம் என்று ஒட்டுமொத்த அரசு ஊழியர்கள் சார்பில் வைக்கப்படும் இக்கோரிக்கையை அரசு ஏற்க மறுத்தால் அரசு ஊழியர்கள் மீண்டும் அலுவலகத்தை விட்டு வீதிக்கு வந்து போர்க்கோலம் பூணுவதை தவிர வேறு வழியில்லை. ❖

# 6.1.2018 மாநிலம் தழுவிய தொடர் முழக்கப் போராட்டம்

ஜாக்டோ ஜியோ கூட்டமைப்பின் மாநில மைய முடிவிற்கிணங்க அனைவருக்கும் ஒரு மாத ஊதியத்தை போனசாக வழங்கிட வேண்டும், பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை ரத்து செய்து அனைவருக்கும் பயன் தரக்கூடிய பழைய ஓய்வூதிய திட்டத்தை அமுல் படுத்திட வேண்டும், எட்டாவது ஊதியக் குழுவின் 21 மாத ஊதிய நிலுவை தொகையை வழங்கிட வேண்டும் உள்ளிட்ட 11 அம்ச கோரிக்கைகளை தமிழக அரசு நிறைவேற்றிட வலியுறுத்தி மாநிலம் முழுவதும் 06-01-2018 அன்று காலை 10 மணி முதல் மதியம் 1 மணி வரை மாவட்ட தலைநகரில் தொடர் முழக்க போராட்டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக

**நாகப்பட்டினம்**

நாகை அவுரித் திடலில் தொடர் முழக்கப் போராட்டம் நடைபெற்றது. மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ப.இரவி, த.லீலாவதி, ஏ.ட்டீ.அன்பழகன் ஆகியோர் தலைமை தாங்கினர். மாநில மையம் சார்பில் தொடக்கப் பள்ளி ஆசிரியர் மன்ற மாநில மகளிர் அணி அமைப்பாளர் மதனா எழிலரன், உயர்நிலை மேல்நிலை பட்டதாரி ஆசிரியர் சங்க மாநில துணைத் தலைவர் என்.அசோக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

ஜியோ நிர்வாகிகள் மு.காந்தி, ப.பார்த்தசாரதி, இரா.மகேசு, சி.மகேந்திரன், காசி.ஆனந்தன், ஜெக.மணிவாசகம், வி.முரளி, ஏ.சேவியர் செல்வகுமார், ஜாக்டோ நிர்வாகிகள் எல்.பிரேம்சந்திரன், ப.அந்துவன் சேரல், வி.கணேசன், எம்.தமிழ்வாணன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். இரெ.காயாம்பூ நிறைவுரையாற்றினார். இறுதியாக அரசு ஊழியர் சங்க மாவட்டப் பொருளாளர் பா.ராணி நன்றி கூறினார். இந்தப் போராட்டத்தில் 500-க்கும் மேற்பட்ட அரசு ஊழியர் மற்றும் ஆசிரியர்கள் பங்கேற்றனர்

**தருமபுரி**

மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் எம்.சுருளிநாதன், பொன்.ரத்தினம், பி.எம்.கௌரன் ஆகியோர் தலைமை வகித்தனர். அரசு ஊழியர் சங்க மாவட்ட செயலாளர் ஏ.சேகர், ஜியோ நிர்வாகிகள் பி.துரைராஜ், டி.எஸ். கவிதா, எஸ்.கேசவன், ஏ.தெய்வானை, காவிரி, கே.இராஜராஜன், சசிகுமார், இ.பி.பெருமாள் உள்ளிட்ட பலர் கோரிக்கைகளை விளக்கிப் பேசினர். ❖

## நிதியளிப்பு கூட்டம்

12.1.2018 அன்று மாலை 16வது தேசிய மாநாட்டிற்கான நிதியளிப்புக் கூட்டம் நடைபெற்றது. மாவட்டத் தலைவர் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு உரையாற்றினார். மாநாட்டு நிதியாக ரூ. 3 லட்சம் வழங்கப்பட்டது.

## அவினாசி வட்டக்கிளை பேரவை

23.1.2018 அன்று மாலை 13வது வட்டக்கிளை பேரவை நடைபெற்றது. வட்டக்கிளை துணைத் தலைவர் சுசீலா தலைமையேற்றார். சுமதி முன்னிலை வகித்தார். நாகராஜன் அஞ்சலி தீர்மானம் வாசித்தார். மாவட்டத் தலைவர் பாஸ்கரன் துவக்கரையாற்றினார். கருப்பன் வேலை அறிக்கையை முன்வைத்தார். அங்கன்வாடி மற்றும் உதவியாளர் சங்கத்தின் தனலட்சுமி, மாவட்ட பொருளாளர் முருகேசன், தமிழ்நாடு சத்துணவு ஊழியர் சங்கத்தின் ரமேஷ் குமார், ஊரக வளர்ச்சி துறை அலுவலர்கள் சங்கத்தின் ராமன் மற்றும் முருகேசன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாநில துணை தலைவர் மொ.ஞானத்தம்பி நிறைவுரையாற்றினார். புதிய பொருளாளர் குகன் நன்றி கூறினார்.

தலைவராக ரமேஷ் குமார், செயலாளராக கருப்பன், பொருளாளராக குகன் ஆகியோர் புதிய நிர்வாகிகளாக தேர்வு செய்யப்பட்டனர்.

# பேரவைக் கூட்டங்கள்

**வடசென்னை**

*6.1.2018 அன்று* **சென்னை மாநகராட்சி பகுதிக் குழு** *பேரவை காலை 10.30 மணிக்கு கொடியேற்றத்துடன் தொடங்கியது. பகுதி தலைவர் பி.சீனிவாசலு சங்கக் கொடியினையும், மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி சம்மேளன கொடியினையும் ஏற்றி வைத்தனர். தியாகிகளுக்கு அஞ்சலி செலுத்தியபின் இணைச் செயலாளர் பாலகுரு வரவேற்றார். மாவட்ட துணைத் தலைவர் பா.சுந்தரம்மாள் துவக்கவுரையாற்றினார். பகுதி செயலாளர் வை.சிவக்குமார், பொருளாளர் ச.ஜீவன் ஆகியோர் முறையே வேலை அறிக்கை மற்றும் நிதிநிலை அறிக்கை சமர்ப்பித்தனர். பகுதி நிர்வாகிகள் ம.நீலகண்டன், காமாட்சி, நா.செந்தில்குமார், கோ.நெடுமாறன் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். மாவட்ட இணைச் செயலாளர் வி.விஜயகுமார், சுகாதார ஆய்வாளர் நலச் சங்கத்தின் ரமேஷ், செங்கொடி சங்கத்தின் ராஜேந்திரன், மாநகர சுகாதார செவிலியர் சங்கத்தின் எம்.ஆர்.செல்வி, நில அளவை ஒன்றிப்பு சங்கத்தின் ஆர்.வரதராஜன் ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட இணைச் செயலாளர் வி.விஜயகுமரன் கருத்துரையாற்றினார். மாவட்டச் செயலாளர் ஜெ.பட்டாபி நிறைவுரையாற்றினார். நிறைவாக துணைத் தலைவர் சு.ருக்மாங்கதன் நன்றி கூறினார். பேரவையில் 10 பெண் ஊழியர்கள் உட்பட 50 பேர் பங்கேற்றறனர்.*

**எழும்பூர் பகுதிக் குழு** *பேரவை 6.1.2017 அன்று மாலை 3 மணியளவில் ஜீவன ஜோதி அரங்கத்தில் நடைபெற்றது. சங்கக் கொடியினை மாவட்ட பொருளாளர் எஸ்.பார்த்திபன் ஏற்றி வைத்தார். பகுதி துணைத் தலைவர் எல்.புகழானந்த் தலைமையேற்றார். இணைச் செயலாளர் பி.அன்சர் பாஷா வரவேற்றார். மாவட்ட பொருளாளர் துவக்கவுரையாற்றினார். வேலை அறிக்கையை செயலாளரும், நிதிநிலை அறிக்கையினை துணைத் தலைவர் தவ்லத்துல்லாவும் சமர்ப்பித்தனர். விஜயா, லோகேஸ்வரி, காமராஜ், அசோக், வேணு ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்தனர். ஆவண காப்பக ஊழியர் சங்கத்தின் சுரேஷ், அனைத்து மருந்தாளுநர் சங்கத்தின் பி.பாண்டியன், ஆய்வக நுட்பனர் சங்கத்தின் அஹமது கபீர் ஆகியோர் வாழ்த்தி பேசினர்.*

*பகுதிக் குழு தலைவராக பி.அன்சர் பாஷா, பொருளாளராக விஜயா, துணைத் தலைவராக சி.பிரவீண், இணைச் செயலாளராக தவ்லத்துல்லா ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர். மாவட்டத் தலைவர் ம.அந்தோணிசாமி நிறைவுரையாற்றினார். தவ்லத்துல்லா நன்றி கூறினார். இதில் 60 பேர் பங்கேற்றறனர்.*

**கிருஷ்ணகிரி**

**கிருஷ்ணகிரி** *வட்டப் பேரவை 7.1.2018 அன்று கொடியேற்றத்துடன் தொடங்கியது. வட்டத் தலைவர் ஜி.வெங்கடேசன் தலைமையேற்றார். மாவட்டத் தலைவர் பி.சந்திரன் துவக்கி வைத்தார். வட்டச் செயலாளர் ஏ.மணி வேலை அறிக்கையும், பொருளாளர் கே.சக்திவேல் நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர். வட்ட நிர்வாகிகள் எம்.முனிராஜ், டி.ராஜி, கே.தேவன், பி.ராஜேந்திரன் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர். துறைவாரி சங்க நிர்வாகிகள் பிரதாப், ராம்தாஸ், புவனேஸ்வரி ஆகியோர் வாழ்த்தி பேசினர். மாவட்ட பொருளாளர் ஆர்.நடராசன் நிறைவுரையாற்றினார். 100க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இதில் பங்கேற்றனர். மாவட்ட செயற்குழு உறுப்பினர் டி.கிருஷ்ணன் நன்றி கூறினார்.*

**ஓசூர்** *வட்டப் பேரவை 21.1.2018 அன்று சூளகிரியில் நடைபெற்றது. வட்டத் தலைவர் எஸ்.சக்திவேல் தலைமையேற்றார். மாவட்ட துணைத் தலைவர் வி.தேவராஜ் துவக்கி வைத்தார். வட்ட துணைத் தலைவர் டி.ஜெயந்தி வேலை அறிக்கையினையும், கே.நாகரத்தினா நிதிநிலை அறிக்கையும் தாக்கல் செய்தனர். வட்ட நிர்வாகிகள் எம்.திம்மராஜ், ஜி.முருகன், முகமது காசிம் ஆகியோர் தீர்மானங்களை முன்மொழிந்து பேசினர். துறைவாரி சங்க நிர்வாகிகள் சப்தமோகன், கே.ஜெயலட்சுமி, பெர்னாட், கருப்பசாமி, தேன்மொழி ஆகியோர் வாழ்த்தி பேசினர். பேரவையை நிறைவு செய்து மாவட்டச் செயலாளர் சி.பி.ஜெயராமன் உரையாற்றினார். ஓசூர், சூளகிரி என இரண்டு வட்டங்களுக்கு புதிய நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர். இதில் 200க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர். வட்ட துணைத் தலைவர் திம்மராஜ் நன்றி கூறினார்.*

❖

# சிந்தனைச் சிற்பி சிங்காரவேலரின் கனவு நனவாக...

பெரணமல்லூர் சேகரன்



முனைவர் வீரராகவன் சிங்கார வேலருடைய அரசியல் மற்றும் தொழிற் சங்கப் பங்கைப் பற்றித் தனது ஆராய்ச்சிக் கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

“புரட்சிகரத் தொழிலாளர் இயக்கத்தின் கொள்கைகளை ஆதரித்த தொடக்ககால முக்கிய தலைவர்களில் ஒருவராக இருந்தவர் சிங்காரவேலர். சென்னையில் தொழிலாளர் நலனுக்காக அவர் ஆற்றிய பணிகள் அளவிடற்கரியவை.

அவருக்கு 1922இல் பம்பாயைச் சேர்ந்த எஸ்.ஏ.டாங்கேயுடன் தொடர்பு ஏற்பட்டது. 1922இல் எம்.என்.ராய் வெளிப்படுத்திய திட்டத்தினால் கவரப்பட்டு அவருடன் தொடர்ந்து கடிதப் போக்குவரத்து வைத்துக் கொண்டிருந்தார். 1923இல் அவர் மே தினம் கொண்டாட இலேபர் கிசான் பார்ட்டி ஆஃப் இந்துஸ்தான், (இந்துஸ்தான் உழவர் உழைப்பாளர் கட்சி ) என்கிற கட்சியைப் புரட்சிகர திட்டத்துடன் ஆரம்பித்தார். அவர் “லேபர் கிசான் கெஜட்” என்ற ஒரு வாரத்துக்கு ஒருமுறை வெளிவரும் ஆங்கில இதழையும், “தொழிலாளன்” என்ற தமிழ் வார இதழையும் ஆசிரியராக இருந்து பதிப்பித்து வெளியிட்டார். அவர் மார்ச் 1924இல் கான்பூர் போல்ஷ்விக் சதி வழக்கில் குற்றம் சாட்டப்பட்டு கைது செய்யப்பட்டார். அவர் நீண்ட காலம் நோய்வாய்ப்பட்டிருந்ததால் அவருக்கு எதிரான நடவடிக்கை கைவிடப் பட்டது. டிசம்பர் 1925இல் கான்பூரில் நடந்த கம்யூனிஸ்ட் கட்சியின் முதல் மாநாட்டுக்கு தலைமை வகித்தார். 1927இல் பெங்கால்-நாக்பூர் ரயில்வே வேலை நிறுத்தத்தில் தீவிரமாக ஈடுபட்டார். 1928இல் வரலாற்றுப் பெருமை வாய்ந்த தென்னிந்திய ரயில்வே வேலை நிறுத்தத்தை நடத்திய தலைவர்கள் மீது தொடரப் பட்ட சதி வழக்கில் அவருக்குப் பத்தாண்டு கடுங்காவல் தண்டனை விதிக்கப்பட்டது. பின்னர் அந்த தண்டனை குறைக்கப்பட்டு ஆகஸ்டு 1930இல் விடுதலை செய்யப்பட்டார்”

“சென்னை நகரின் தொழிலாளர் போராட்டங்களிலும், தென்னிந்திய ரயில்வே போராட்டங்களிலும் மும்முரமாகப் பங்கேற்றதுடன், தனது பத்திரிகைகளிலும், செய்தித் தாள்களிலும் கட்டுரைகள் எழுதியும் பொதுக் கூட்டங்கள் நடத்தியும் ஓய்ச்சல் ஒழிவின்றி, கம்யூனிசப் பிரச்சாரம் செய்து வந்தார். மே தினம், உலக அமைதி தினம் கொண்டாடியதுடன் ஆகஸ்ட் 1927இல் சாக்கோ மற்றும் வான்செட்டி ஆகியோரின் மரண தண்டனையை எதிர்த்துக் கூட்டங்களும் நடத்தினார்.

1927இல் பிரிட்டிஷ் கம்யூனிஸ்ட்டும், பாராளுமன்ற உறுப்பினருமான ஷாபூர்ஜி சக்லத்வாலா சென்னைக்கு வருகை தந்தபோது சிங்காரவேலர் கேட்டுக் கொண்டதால் சென்னை மாநகராட்சி அவருக்கு வரவேற்பு விழா ஏற்பாடு செய்தது. சக்லத்வாலா பேசிய கூட்டங்களில் அவரது உரையை சிங்காரவேலர் மொழிபெயர்த்தார். சக்லத்வாலாவின் வருகை சோவியத் யூனியனின் சாதனைகளைப் பரப்பவும் கம்யூனிச திட்டத்தைப் பற்றிய சீரிய புரிதல் உருவாகவும் உதவி செய்தது.

1927இல் சென்னையில் நடந்த இந்திய தேசிய காங்கிரஸ் மாநாடு நகரின் இளைஞர்கள் மத்தியில் இடது தேசியவாதத்தின் மீது அக்கறை ஏற்படுத்துவதில் முக்கிய பங்காற்றியது ஜவகர்லால் தலைமை ஏற்ற அந்த காங்கிரஸ் மாநாட்டின் விவாதங்களில் சிங்காரவேலரும் மற்றும் வழக்கிலிருந்து வந்த கம்யூனிஸ்ட் பிரதிநிதிகளும் மும்முரமாகப் பங்கேற்றனர்.

இந்த நடவடிக்கைகளும் சரி, சிங்காரவேலரின் அயராத உழைப்பும் சரி, எதுவும் சென்னையில் ஒரு முறையான கம்யூனிசக் குழு உருவாக உதவ வில்லை. சென்னையில் கம்யூனிசக் குழுவை முதன் முதலாக உருவாக்கிய பெருமை, வடமேற்கு மாநிலத்தைச் சேர்ந்த பத்தான் வகுப்பினரும், முன்னாள் கடற்படை வீரருமான அமீர் ஹைதர்கான் அவர்களைச் சாரும்”

ஏ.கே.ஜி. ஆராய்ச்சி மையத் தலைவர் பி.கோவிந்த பிள்ளை சிங்காரவேலரின் 150-ஆவது பிறந்தநாள் விழா மலரில் எழுதியிருந்த தனது கட்டுரையில் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:

“1860ஆம் ஆண்டு பிப்ரவரி 18ஆம் தேதியன்று எம்.சிங்காரவேலு செட்டியார் பிறந்தார். அவரது குடும்பம் பிற்படுத்தப்பட்ட மீனவர் சமூகத்தைச் சேர்ந்த தாகும். மிகக் கடுமையான தொழிலைச் செய்து வந்த போதிலும் மீனவர்களுக்கு அவர்களது தேவைக்கு ஏற்ற வருமானம் கிடைப்பதில்லை. கடற்கரையில் குடிசைகளுக்கிடையே சுகாதாரமில்லாத, மிக மோசமான சூழ்நிலையில், வழக்கமான கல்வியோ, மரியாதைமிக்க குடியுரிமையோ இல்லாதவர்களாகவே அவர்கள் வசித்து வந்தனர். இச்சமூகத்தினைச் சேர்ந்த மற்றவர்களைவிட

ஓரளவிற்கு மேம்பட்ட நிலையில் சிங்கார வேலரின் பெற்றோர் இருந்தபோதிலும் சாதிய புறக்கணிப்பு மற்றும் ஒடுக்கமுறை என்ற தளையிலிருந்து அவர்களால் விடுபட இயலவில்லை.

வறுமையிலும், சகதியிலும் வாழ்ந்து வந்த ஒடுக்கப்பட்ட மக்களிடையே உருவான சிங்கார வேலர், தனது சமூகத்தைச் சேர்ந்தவர்கள் சந்தித்த ஏற்றத்தாழ்வுகளைக் கண்டு சிறுவயதிலேயே உணர்வு தூண்டப்பட்டவராக இருந்தார். சென்னையின் புகழ்பெற்ற கல்லூரிகளில் பட்டம் பெற்று, வளமான வருமானம் தரும் வக்கீல் தொழிலில் இறங்கிய போதிலும், மீனவர்களின் மிக மோசமான வாழ்க்கை நிலைமைகள் அவரைத் தொடர்ந்து வாட்டிக் கொண்டேதான் இருந்தன. எனவே சமூக சேவை நடவடிக்கைகளிலும், மேல் தட்டு சாதியினருக்கு எதிரான போராட்டங்களிலும் அவர் இறங்கினார். இத்தகைய அனுபவங்கள்தான் தேசிய விடுதலைப் போராட்டத்தை நோக்கி அவரைக் கவர்ந்திழுக்க உதவின என்றும் உறுதியாகக் கூறலாம்.

முறையான பயிற்சிக்குப் பிறகு சிங்காரவேலர் சென்னை உயர்நீதிமன்ற வழக்கறிஞர் சபையில் வழக்கறிஞராகத் தன்னைப் பதிவு செய்து கொண்டார். இந்த நீதிமன்றங்களும், அதில் செயல்பட்டு வந்த வழக்கறிஞர்களின் வெற்றி என்பது சட்ட வழிமுறைகளின் நுணுக்கமான தன்மைகள் மட்டுமின்றிப் பெரும்பாலான மக்களின் வாழ்க்கை நிலைமைகள் மற்றும் அவர்களின் போராட்டங்களும் அடங்கியதே ஆகும். எனினும் பணத்தையும் பதவியையும் மட்டுமே நோக்கமாகக் கொண்ட வழக்கறிஞர்களின் கண்களில் இது போன்ற விசயங்கள் தென்படுவதில்லை.

ஆனால் சிங்காரவேலரோ மிகவும் வித்தியாசமானதொரு சூழ்நிலையில் வளர்ந்து வந்தவர். இவை அனைத்துமே அவரது இளம்பருவத்தில் உருப் பெற்ற கருத்துக்கள், அனுபவங்கள் ஆகியவற்றை உறுதிப்படுத்துவதாகவே அமைந்தன. பொதுவாகவே வழக்கறிஞர்கள் தம்மிடம் முதலில் வருபவருக்குச் சார்பாகவே வழக்குகளை, அவரது வாடிக்கையாளர் குற்றவாளியா அல்லது பாதிக்கப்பட்டவரா என்பதைப் பற்றிக் கவலைப்படாமல், ஏற்றுக் கொள்வது வழக்கம். ஆனால் அப்போது தான் வழக்கறிஞர் தொழிலில் இறங்கிய சிங்கார வேலரோ எந்தவொரு சூழ்நிலையிலும் அடக்கு முறையாளர்கள், பேராசைக்காரர்கள் ஆகியோரின் சார்பாக எப்போதும் வழக்காடியதில்லை என்பது குறிப்பிடத் தக்கதாகும்.

சிங்காரவேலர் ஒரு கம்யூனிஸ்டாக உருவாவதற்கு இரண்டாவது தீர்மானகரமான அம்சமாக விளங்கியது அவரது ஆழ்ந்த புலனறிவே ஆகும். ஆங்கிலம், தமிழ் மொழிகளைத் தவிர, இந்தி, உருது, பிரெஞ்ச், ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் அவருக்குப் பட்டறிவு இருந்தது. இத்தகைய பன்மொழிப் புலமையானது அவரது கற்றலை விரிவுபடுத்தியதோடு, ஆழ்ந்த அறிவையும் ஏற்படுத்தித் தந்தது.

பல்வேறு வகையிலும் 1902ஆம் ஆண்டு இங்கிலாந்திற்குச் சிங்காரவேலர் மேற்கொண்ட பயணம் மகத்தான அநுபவமாக அமைந்தது என்றே கூறலாம். அந்த நேரத்தில் தான் மகத்தான சோஷலிஸ்ட் பேச்சாளரும் அமைப்பாளருமான கெர் ஹார்டியின் தலைமையின் கீழ்ப் புதிதாக உருவாக்கப்பட்டிருந்த தொழிலாளர் கட்சி பிரிட்டிஷ் அரசியலின் வடிவத்தை மாற்றி யமைத்துக் கொண்டிருந்தது. உயிரோட்டமான சோஷலிஸ்ட் தத்துவம் நடைமுறை என்ற பாரம் பரியத்தை உருவாக்கி விட்டுச் சென்று பிரடெரிக் எங்கெல்ஸ் மறைந்து ஏழு ஆண்டுகளே ஆகியிருந்தது. இவையனைத்துமே இந்தியாவிலிருந்து வந்திருந்த இளைஞரின் மீது ஆழ்ந்த தாக்கத்தை ஏற்படுத்தின.

அவர் இங்கிலாந்தில் இருந்தபோது மற்றுமொரு முக்கியமான சம்பவமும் நடைபெற்றது. அது தான் உலக புத்த மதத்தவரின் மாநாடாகும். இந்த மாநாட்டிலும் சிங்காரவேலர் பங்கேற்றார். கிட்டத்தட்ட புத்த மதத்திற்கு அவர் மாறி விட்டார் என்றே கூறிவிடலாம். சாதிய முறைக்கு எதிரான, பிராமணிய பலியிடல், சடங்கு முறைகள் ஆகியவற்றிற்கு எதிரான கௌதம புத்தரின் கருத்துக்கள் ஏற்கனவே துடிதுடித்துக் கொண்டிருந்த இளம்புரட்சியாளரின் இதயத்திலும், மனத்திலும் அலைமோதிக் கொண்டிருந்த கருத்துக்களே ஆகும்.

கான்பூர் மாநாட்டிற்குப் பிறகு சிங்காரவேலர் உள்ளிட்ட கம்யூனிஸ்டுகள் நாட்டின் பல பகுதிகளிலும் சட்டபூர்வமாகச் செயல்படுவதற்காகத் தொழிலாளர் மற்றும் விவசாயக் கட்சியை உருவாக்கினர். சிங்காரவேலரின், சாதிக்கு எதிரான உறுதியான நிலைப்பாடும், இந்துச் சடங்குகள், அவர்களது மனுஸ்மிருதி போன்ற நூல்களின் மீதான அவரது வெறுப்பும் தான் ஈ.வெ.ராவின் சுயமரியாதைக் கட்சியுடன் நெருக்கமாக அவரைச் செயல்பட வைத்தது எனலாம். ஈ.வெ.ரா நடத்தி வந்த “குடியரசு” இதழிலும் அவர் தொடர்ந்து கட்டுரைகளை எழுதி வந்தார். ஏகாதிபத்திய எதிர்ப்புப் போராட்டம் குறித்து, சுயமரியாதை இயக்கமும் நீதிக்கட்சியும் கொண்டிருந்த பாராமுகமான போக்கினைச் சிங்காரவேலர் அங்கீகரிக்கவில்லை. எனவேதான் சுயமரியாதை சோஷலிஸ்ட் கட்சி ஒன்றை உருவாக்குவதற்கான முயற்சிக்கு அவர் ஆதரவளித்தார்”

சோவியத் வரலாற்று ஆசிரியர் அன்தனோவா சிங்காரவேலரின் ஆரம்பகால கம்யூனிஸ்ட்

தொடர்புகளைப்பற்றி எழுதும்போது இவ்வாறு குறிப்பிட்டு உள்ளார்:-

"கான்பூர் பத்திரிகையாளரான சத்திய பக்த் என்பவர் சட்டபூர்வமான " இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சி" அமைக்கப்பட்டிருப்பதாக 1924, செப்டம்பர் மாதம் அறிவித்தார். இந்தக் கட்சி கம்யூனிஸ்டு அகிலத்துடனும் மற்ற அயல்நாட்டுப் புரட்சி மையங்களுடனும் தொடர்பு கொண்டிருக்கவில்லை என்று அதன் தலைவர்கள் தங்கள் அறிக்கையில் அழுத்திக் கூறியிருந்தார்கள். இந்தக் காரணத்தால் அது நிறுவப்பட்டதை அதிகாரிகள் பொறுமையுடன் அனுமதித்தார்கள். சத்திய பக்த் அமைத்த கட்சி இந்தியக் கம்யூனிஸ்டுகளுக்கு ஈர்ப்பு மையமாக விளங்கவில்லை என்றாலும் இந்திய மார்க்சியவாதி களின் தனித்தனிக் குழுக்களை ஒன்றாக இணைப்ப தற்கான முன்னேற் பாடுகளை அவர் தொடர்ந்தார். ஒன்றிணைப்பு மகாநாடு கூட்டுவதற்கு முன்னேற் பாடுகள் செய்யும் பொருட்டு இடதுசாரி காங்கிரஸ் காரரான ஹஜரத் மொஹானியின் தலைமையில் ஒழுங்கமைப்புக் கமிட்டி நிறுவப்பட்டது. இதன் பயனாக இந்தியக் கம்யூனிஸ்டுகளின் முதல் மகாநாடு 1925, டிசம்பர் 28 முதல் 30 வரை கான்பூரில் சென்னை கம்யூனிஸ்டு எம்.சிங்காரவேலரின் தலைமையில்நடந்தது. இந்தியக் கம்யூனிஸ்டுக் கட்சியை அமைப்பது என்றும் அதன் மையத்தை பம்பாயில் வைத்துக் கொள்வது என்றும் மகாநாட் டில் முடிவு செய்யப்பட்டது. தேர்ந்தெடுக்கப்பட்ட மத்திய செயற் குழுவின் செயலாளர்களான ஜே.பெகெர்ஹொத்தாவும் எஸ்.வி.காட்டேயும் பதவி ஏற்றார்கள். இந்தியாவில் இருந்த முக்கியமான கம்யூனிஸ்டுக் குழுக்கள் எல்லாவற்றினுடையவும் பிரதிநிதிகள் மத்தியச் செயற்குழுவில் இடம் பெற்றார்கள்.

உழைப்பாளி மக்களின் சட்டபூர்வமான வெகுஜன நிறுவனத்தை - தொழிலாளி-விவசாயிக் கட்சியை - கம்யூனிஸ்டுகளின் தலைமையில் நிறுவுவதற் கான முதல் முயற்சி 1923லேயே சிங்காரவேலரால் மேற்கொள்ளப்பட்டது"

அவர் 'கயா' காங்கிரஸ் மாநாட்டிலேயே தன்னுடைய பொதுவுடைமைக் கருத்துக்களை வெளி யிட்டு ஒரு கம்யூனிஸ்ட் அகிலத்தின் பிரதிநிதியாகத் தன்னைக் கூறிக்கொண்டு அவர் பேசிய பேச்சுரையின் பகுதியை இங்கே குறிப்பிட வேண்டும்:

"உலக கம்யூனிஸ்டுகளின் சிறப்புக்குரிய வரிசை முறையில் உலக நலனில் அக்கறை உள்ள மாபெரும் இயக்கத்தின் பிரதிநிதியாக இங்கு வந்துள்ளேன். உலகத் தொழிலாளர்களுக்கு கம்யூனிசம் தரும் உயரிய வாழ்த்துச் செய்தியை உங்களுக்குத் தர வந்துள்ளேன். சோவியத் ரஷ்யாவின் கம்யூனிஸ்டுகள், ஜெர்மன் கம்யூனிஸ்டுகள் மற்ற உலகக் கம்யூனிஸ்ட் டுகள் ஆகியோரின் வாழ்த்துக்களை உங்களுக்கு அளிக்க இங்கு வந்துள்ளேன்"

"ஏ,பணக்காரர்களே! எச்சரிக்கையாக இருங்கள்! ஏ, பெரிய மனிதர்களே, விழிப்புடன் இருங்கள்! எங்களின் துயரங்கள் அனைத்தையும் கடுமையான உழைப்பையும் ஞாபகப்படுத்திப் பாருங்கள்! உலகில் நல்லன யாவற்றையும் உழைப்பு உங்க ளுக்குத் தந்துள்ளது. நீங்களோ அவனை மூலையில் வைத்துள்ளீர்கள். எந்த நேரத்திலும் உங்கள் தேவை களுக்காகப் பணியாற்றும் அவனை (தொழிலாளியை) நீங்கள் புறக்கணித்துக்கொண்டு வருகிறீர்கள். அவனது (தொழிலாளி) திறமை, ஈடுபாடு, அறிவி னால் நீங்கள் உலகில் உள்ள இன்ப வாழ்க்கைக்குரிய பொருள்களையெல்லாம் அனுபவித்துக்கொண்டு வருகிறீர்கள்.

ஆனால் பூர்ஷ்வா என்னும் செருக்கு மிக்க சகோதரர்கள், புறக்கணிக்கப்பட்ட சின்ட்ரெல்லாவின் (தொழி லாளர்களின்) தலைமையின் கீழ் விழும் நாள் நாடகத்தின் கடைசிக்கட்டம் நெருங்கிக்கொண்டு வருகிறது. தகுதி, அழகு இரண்டிலும் மிக உயர்ந்த தென அறிவிக்கப்பட்டுள்ள இந்தியத் தொழிலாளி ஒப்புயர்வற்ற முறையில் ஆட்சி செய்வான், பூர்ஷ் வாக்களே, இந்தியத் தொழிலாளி வர்க்கம் விழிப் படைந்துள்ளது. அவர்கள் கண்ணை மூடாது விழித் திருப்பார்கள். உலகைக் காப்பாற்றப் படிப்படியாக வும், உறுதியாகவும் தம் உரிமைகளைப் பெற்று வருகிறார்கள்"

மார்க்சும், ஏங்கல்சும் கூட்டாக எழுதி வெளி யிட்ட "கம்யூனிஸ்ட் அறிக்கை"யை சிங்காரவேலர் தனது "ஸ்வதர்மா" பத்திரிகையில் வெளியிட்டதோடு மட்டு மல்லாமல் அதை மானுடத்தின் குறிப்பிடத் தக்க ஆவணம் என்று அழகாகத் தனது கட்டுரையில் குறிப்பிட்டிருந்தார்.

இந்தியத் தொழிலாளர்களுடைய கடுமையான உழைப்பைப் பற்றியும் அவர்கள் சுரண்டப்படுவது பற்றியும் கூறியதோடு மட்டுமல்லாமல் அவர்கள் எப்படி இச்சுரண்டலிலிருந்து விடுபட முடியும் என்பது பற்றியும் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்:-

"தற்போது இந்தியாவில் தொழிலாளர்களின் நிலைமை திரிசங்கு சுவர்க்கத்தைப் போலிருக்கிறது. தொழிலாளிகளுக்குச் சொந்தமான நிலம் கிடையாது. வீரம் போய்விட்டது. பண்டைய கைத் தொழிலை விட்டு விட்டுக் கூலிக்காக அடிமைப்பட்டு இருக்கிறார்கள். வசிப்பதற்குச் சொந்த இடமில்லை. குடிக்கூலிக்கிருக்கிறார்கள். அவர்களது வாழ்க்கை சந்தோஷத்தைக் கொடுக்கக் கூடியதல்ல. ஒரு சிலர் நன்மை எய்துவதற்காகத் தொழிலாளி, அநேக மணி நேரம் வேலை செய்கிறான். ஒரு சிலர் நன்மையும்,

சௌக்கியத்தையும் அடைவதற்குரியவைகளைத் தொழிலாளி செய்கிறான். அந்தோ! கடைசியில் அவன் நிலைமை என்ன? அவனைப் பற்றிக் கவனிப்பார் யாருமில்லை. அவன் எல்லாவற்றிற்கும் காரண கர்த்தனாயிருக்கிறான். ஆனால் அவனுக்கு ஒன்றும் கிடைப்பதில்லை. இவ் விஷயம் ஆச்சரியமானதல்லவா? இதற்குப் பரிகாரம் என்ன?

நீங்கள் எல்லாவற்றையும் உற்பத்தி செய்கிறீர்கள். ஆனால் உங்களுக்கு ஒன்றுமே சொந்தமில்லை. உலகத்தில் செல்வம் பெருகிக்கிடக்கின்றது. ஆனாலும் உங்களுக்குப் போதுமான உணவும், உடையும், இருப்பிடமும் கிடையா... ...ஏராளமான விளைபொருட்கள் இருந்தும், ஜனங்கள் கஷ்டப் படுகிறார்கள்... ஏன்?... தொழிலாளர்கள் பொருளை அபரிமிதமாய் உற்பத்தி செய்கிறார்கள். அப்படி யிருந்தும் அவர்களுக்குப் போதுமான அளவு பொருட்கள் கிடைப்பதில்லை. பொருள்களை உற்பத்தியாக்குவோனுக்கும், அதை வாங்கி அனுப விப்பவனுக்கும் இடையில் மூன்றாவது மனிதன் ஒருவன் இருக்கிறான். இவன் தான் எல்லாவற் றிற்கும் சொந்தக்காரனாகப் பாவிக்கப்படுகிறான். இவன் நிலத்தில் விளையும் பொருள்களையும் சுரங்கங்களிலிருந்து தோண்டி யெடுக்கப்படும் உலோக வகைகளையும், ரயில் வேக்களையும், கப்பல்களையும், தொழிற்சாலைகளையும், தன்னுடையதாக ஆக்கிக்கொண்டு தன்னிஷ்டம் போல் விலை ஏற்படுத்துகிறான். இதனால்தான் பஞ்சம், நோய், கஷ்டங்கள், அமைதியின்மை, வேலை நிறுத்தங்கள், இராஜிய புரட்சிகள் ஆகிய, இவைகள் உலக முழுமை யிலும் ஏற்படுகின்றன. அவன்தான் முதலாளி.

இந்தியாவிலுள்ள தொழிலாளர்கள் அரசியல் உணர்வை வளர்த்துக்கொள்ள வேண்டுமா? வேண்டுமாயின், அது எவ்வகையான அரசியலாக இருக்கவேண்டும் என்ற பிரச்சினை எழுந்துள்ளது. இந்தியாவில் தொழிலாளி வர்க்கம் வளர்ந்து கொண்டு இருக்கிறது. முட்டை புழுப் பருவத்தை அடையும் நிலையை அது ஏற்கனவே கடந்து விட்டது. அது ஒன்றாகத் திரண்டு வருகிறது. நேர்மை யற்ற, பேராசை பிடித்த முதலாளிகளுக்கெதிராக, உறுதிமிக்க எதிர்ப்பைக் காட்ட முயல்கிறது. நாட்டின் அரசாங்கம் முதலாளிகள் பக்கமே பெரிதும் சாய்ந்திருப்பதை அது காண்கின்றது.

நாட்டில் தற்போது நிலவும் அரசியலுறவுகள் உள்ள நிலைமையில், இச்சிறப்புமிக்க நம் நாட்டில் வசிக்கும், எல்லாக் கடுமையான உழைக்கும் மக்களின் விடுதலை நம்பிக்கை ஆகியவைகளின் சின்னமாக விளங்கும், சுயராஜ்யக் குறிக்கோள் அதன் நீண்ட நெடுங்கால அடிமைத்தனத்தி லிருந்தும், துயரத்திலிருந்தும், விடுதலை பெற அது நம்பி யுள்ளது. தொழிலாளரின் குறிக்கோள், ‘இந்திய சுயராஜ்யம்’- ‘அரசியலிலும் தொழில் துறையிலும் ராஜ்யம்’.

சுமார் மூன்று கோடி மக்கள் பெரிய தொழிற் சாலைகளடங்கிய ரெயில்வே, பஞ்சு, நெசவு, சாய நெசவு, தேயிலை, காஃபி, பயிர், இரும்புச் சுரங்கம் முதலிய வேலைகளில் உழைத்துவருகின்றனர். இவர்களுடைய வருமானமும், சாதாரண ஜீவனத் திற்கே போதாது. தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வோரின் வருமானம், ஆணுக்குத் தினமொன் றுக்கு ஆறேமுக்கால் அணாவும், பெண்ணுக்கு ஐந்தணாவும், பத்துப் பன்னிரண்டு வயது குழந்தை களுக்கு மூன்று அணாவும் ஆகும். இம்மூன்று பேரும், ஒரு குடும்பத்தைச் சேர்ந் திருந்தால் இவர்க ளுடைய மொத்த வருமானம், தினமொன்றுக்குப் பதினாலே முக்காலணாவாகும். இதைக்கொண்டு துணிமணிகள் போன்ற அவசியச் செலவுகளைச் செய்து கொள்ளவேண்டும். இந்த வேலை, அடிமை வேலைக்குச் சமானமென ஆங்கிலத் தொழிற்சங்கப் பிரதிநிதிகள் தங்கள் அறிக்கையில் வரைந்துள்ளார்கள். மற்ற தொழி லாளர்களின் வருமானமும் இதற்கு அதிகமில்லை."

யார் இந்த சுரண்டலமைப்பைக் கட்டிப் பாதுகாக்கிறார்கள் என்பது பற்றி அவருக்கு எவ்வித சந்தேகமும் இருந்ததில்லை. அதேபோல் காந்தியா ருடைய சுய ராஜ்ஜியத்தில் சாதாரண மக்களுக்கு எவ்வித பிரயோ ஜனமும் இருக்கப்போவதில்லை என்று மக்களிடம் அறிவிக்க அவர் தயங்கியதில்லை. இக்கருத்துக்களை அவர் தனது பல கட்டுரைகளில் மிகத் தெளிவாக எழுதியிருந்ததைப் பார்க்கலாம்:-

“எளியோருக்கு நியாயஸ்தலங்களால் பயனில்லை என்று ஜட்ஜ் பாரி என்பவர் சொல்லுகின்றார். “எந்தக் காலத்தில் கோர்ட்டுகளும், லாயர் ஸ்தாபனங்களும், இந்த உலகை விட்டு ஒழியுமோ அந்தக் காலத்தில் தான், உலகம் சுகப்படும்” என்றார் அமெரிக்கா தேசத்து மெய்ஞ்ஞானி யாகிய வாட்ஸன்”

இந்தத் தேசிய முதலாளிகளே, இந்த வர்த்தகர் களே, இந்த ஜட்ஜுகளே, இந்த லாயர்களே, சுயராஜ்யத்தில் அரசு புரியப் போகின்றவர்கள் இந்தத் தேசியவாதிகளே அரசு புரியப் போகின்றவர்கள். இவர்களுடைய செல்வத்தையும், செல்வாக்கையும், ஆதிக்கத்தையும், பாமர மக்களுக்குச் சரிசமமாக விட்டுக்கொடுக்கப் போகின்றார்களோ? அது ஒரு போதுமில்லை. பிற நாட்டிலுள்ள செல் வத்தின் மேல் இவர்களுக்கெல்லாம் ஒரு கண் இருந்தே தீரும்.

புலியும், பசுவும் ஓர் துறையில் நீர் அருந்தினாலும் அருந்தும்: ஆனால் முதலாளியும் தொழிலாளியும் சரிசமத்துவமாகத் தங்கள் தேச பொருள்களை, காந்தியாரின் சுயராஜ்யத்தில் அனுபவிப்பார்கள் என்பது பகற்கனவே. உடையவன், இல்லாதவன், என இனி மனிதக் கூட்டம் பிரிந்திருப்பதும், இந்தத்

தனிச் சொத்து உரிமையால் நிகழ்ந்து வரும் வித்தியாசம் என அறிதல் வேண்டும். முதலாளி-தொழிலாளி என்ற வித்தியாசமும்,

அடிமை என்னும் வித்தியாசமும் மக்களுக்குள் ஏற்படக் காரணம் என்னவெனில், சிலரிடம் பொருள் தங்கவும், பலரிடத்தில் ஒன்றும் இல்லாமையாலும் என அறிக.

இந்தப் பொருளாதார வேற்றுமையுள்ளவரை எந்த அரசாயினும் சரி, சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம், என்பதெல்லாம் பொய்ப்பேச்சே. உடையவனுடைய பொருளைக் காப்பதற்குத் தான், எல்லாப் போலீசும், எல்லா நீதியும், எல்லாச் சேனை சிப்பந்திகளும் ஏற்பட்டுள்ளன. ஆனால், எந்த இல்லாதவனுடைய வறுமையைப் போக்க, எந்த நியாயம், எந்தச் சட்டம், எந்த அரசு ஏற்பட்டுள்ளது?

சுயராஜ்யமா? சமதர்ம ராஜ்யமா? இந்தப் பிரச்சினைக்குக் கொடுக்கும் விடையில்தான் 160 கோடி உலக மக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன. இந்த விடையில்தான் 35 கோடி இந்திய மக்களின் சுகாசுகங்கள் அடங்கியுள்ளன.

காந்தியார் சுயராஜ்யத்தில், தனி உடைமை ஆதரிக்கப்படும். அதில் அடங்கியுள்ள பொருளாதார அடிமைத்தனமும் நிலைத்து வரும். தொழிலாளிகளுக்கும் விவசாயிகளுக்கும் உண்ணப் போதுமான உணவு இல்லாமை இன்றைக்கு உள்ளதைப் போலவே இருந்து வரும். தோழர்களே! இந்தச் சுயராஜ்யமா வேண்டுமெனக் கேட்கின்றேன்! ஏனெனில், காந்தி ராஜ்யத்தில் தற்போதுள்ள நிலைமையாகிய பொருளாதார வித்தியாசமே நிலைத்துவரப் போகின்றது. ஆயிரம் பதினாறாயிரம் பேர்கள் மாத்திரம் எல்லா நிலங்களையும், நீர்களையும்தொழிற்சாலைகளையும், ரயில்வேக்களையும், வீடுவாசல்களையும், வங்கிகளையும் சொந்தமாக ஆண்டு வரப் போகின்றார்கள். ஆனால் கோடானு கோடி மக்களோ, இவை எதுவும் சொந்தமின்றி உண்ணப் போதுமான உணவின்றி, அறிவு விளங்கச் சரியான கல்வி இன்றி, மக்கள் வசிக்க சுகாதாரமான வீடின்றி, போதுமான கூலியின்றி, வேலை நிச்சயமின்றி உழைத்து வரப்போகிறார்கள். காந்தியாரின் சுயராஜ்யத்தில் அதுதான் சிலருக்கு வரப்போகும் நற்பாக்கியம். இதுதான் பெரும் பான்மையோருக்கு வரும் துர்ப்பாக்கியம்"

சிங்காரவேலர் கனவு கண்ட சமதர்ம சமூகத்தில் மக்களுக்கு என்ன நன்மைகள் இருக்குமென்பதைப் பற்றி அவர் மிகத் தெளிவாகப் பல கட்டுரைகளில் வெளியிட்டிருந்த கருத்துக்களின் சாராம்சம் இதோ:-

1. சகலவிதப் பொருள்களிலும் லாபம் சம்பாதிக்கும் மனப்போக்கு சமதர்மத்தில் இல்லாமலிருக்கும். இந்த மனப்போக்கால் உழைத்தவனுக்கு ஒன்று மில்லாமல், உழைக்காத சோம்பேறிகளுக்கு எல்லா லாபமும் கிடைக்கும் திட்டம் சமதர்மமில்லை.

2. சிலரே, சகல பொருள்களையும் கைப்பற்றி, சொந்தமாக்கிக்கொள்ளும் இலட்சணமும், சமதர்மத்தில் இல்லாமல் இருக்கும்.

3. விளையும் பொருள்களும், செய்யும் பொருள்களும், விளைவிக்கச் செய்யும் சமூகத்தாருக்கு, ஏற்றத்தாழ் வின்றி விநியோகம் செய்யப்படும். இலட்சணம் சமதர்மத்தில் விசேடமாக பொருந்தி உள்ளது.

4. சமதர்ம சமூகத்தில், நிலத் தீர்வை வாங்கும் நிலச்சுவானும் குடிக்கூலி வாங்கும் சொந்தக்காரனும் இருக்கமாட்டார்கள். லாபம் சம்பாதிக்கும் வர்த்தகனும், வட்டி வாங்கும் வணிகனும் இருக்க மாட்டார்கள். அவசியமாக வாங்கவேண்டிய நிலத்தீர்வையும், குடிக்கூலியும், வீட்டு வாடகை யையும் வர்த்தக லாபமும், கடனுக்கு வட்டியும், சகலவித லாபங்களும் பொதுமக்களுக்கே உரித்தாகி, பொதுமக்களுக்கே அவர்கள் உண்ண உணவு, தங்க வீடு வாசல், அணியும் ஆடை, கற்கும் கல்வி முதலிய வாழ்விற்கு வேண்டிய அத்தியாவசியங்களுக்கு உபயோகப் படுத்தப்படும்.

5. தற்கால சோம்பேறிகளாகிய நிலச்சுவானும், வர்த்தகனும், வணிகனும், வாடகை வாங்குவோனும், சமதர்ம சமூகத்தில் உழைத்து எல்லாவித சமதர்ம சுகபோகங்களைப் பெறுவார்கள்.

6. சமதர்ம சமூகத்தில் சொத்து வைத்திருக்கும் சாதி என்றும் சொத்து இல்லாத சாதியென்றும் இனவேற்றுமை இருக்காது. எஜமான் சாதியென்றும் வேலை செய்யும் சாதியென்றும், சமதர்மத்தில் கிடையாது. தற்கால உலகத்தில் இருக்கும் இரண்டு சாதியாகிய பொருளாளி, தொழிலாளி என்போர் இருக்கமாட்டார்கள். சமதர்மத்தில் ஒரே இனம்தான் இருக்கும். அதாவது உழைக்கும் இனம் ஒன்றுதான்.

7. சமதர்மத்தில் ஒவ்வொருவனும் உழைப்பதுவே சமதர்மக் கொள்கையாகும்.

8. "உழைக்காதவனுக்கு உணவில்லை" என்பதே சமதர்மக் கொள்கையாகும்.

9. தற்காலத்தில் உழைப்பின்றிச் சோம்பேறிகளாக வாழ்ந்து வரும் சில மக்களுக்குச் சமதர்மத்தில் வாழ இடமே இல்லை.

10. சமதர்மத்தில், சோம்பேறிகள் வாழவும் முடியாது.

"சமதர்ம உலகில் மனிதன் மேன்மேலும் தன் வாழ்வை உயர்த்திக்கொண்டே போவான். சதா உயர்ந்துகொண்டே போகும் வாழ்விற்கு வேண்டிய பொருள்களை உண்டாக்க, எல்லோருக்கும் வேலை இருந்துகொண்டே இருக்கும். இந்தச் சமதர்ம

சமூகத்தில், இறந்து போனவர்களுக்கும், இறந்தவர்களுக்குச் சமமானவர்களுக்குமே ஒழிய, மற்ற உயிர் வாழும் எந்த மனிதர்க்கும் வேலையில்லாமலிராது. சமதர்ம சமூகத்தில், வேலை செய்துவரும் வேலையெல்லாம், சிலரின் உபயோகத்திற் கில்லாமல் அனைவருடைய உபயோகத்திற்கும் செய்துவரப்படுமாகையால், அதில் உழைப்பவன் ஒவ்வொருவனுக்கும் வேலை செய்து உழைக்க அவா மேலிட்டுவரும். சமதர்ம சமூகத்தில் ஒருவனுக்காகப் பலர் உழைக்க வேண்டிய அவசியமில்லாதபடியால் ஒவ்வொருவரும் தனக்குத் தெரிந்த வேலையை அன்புடன் செய்து வருவான். 8,9,10 மணி நேரம் வேலை செய்யும் தற்கால வேலைகள் சமதர்ம சமூகத்தில் இருக்கவே இருக்காது. வாழ்விற்கு வேண்டிய பொருள்கள்யாவும் உலகிலுள்ள மக்கள் 4 மணி நேரம் உழைப்பதனாலேயே கிடைக்கக்கூடுமென, பொருளாதார விற்பன்னர்கள் ஒரு கணக்கெடுத்திருக்கின்றார்கள். உலகில் கிடைக்கக்கூடிய எல்லா அவசிய சுக போகங்களை யாவரும் அனுபவிக்க வேண்டும் என்றாலும், மனிதருடைய 4 மணி நேர உழைப்பே போதுமென மதிப்பிட்டிருக்கின்றார்கள்.

இந்தச் செல்வாக்கு சமதர்ம சமூகத்தில்தான் கிடைக்கும். மற்ற நேரங்களை எவ்விதம் கழிப்பதென்று கேள்வி பிறக்கலாம். அதற்கு விடையாதெனில், மன உல்லாசம், திரேக உல்லாசம், பொது மக்கள் சேவையில் உல்லாசம், விஞ்ஞான ஆராய்ச்சியில் உல்லாசம் முதலிய சுகப் பேற்றை ஓய்வு நேரங்களில் யாவரும் அனுபவிக்கக் கூடும்... ...சமதர்ம திட்டத்தில் ஓய்வு நேரம் அதிகரிக்குமாகையால், சகலரும் உயர்தர வித்தைகளைக் கற்று வாழ்வை உயர்த்திக் கொள்ள அனுகூலமாகு மன்றோ!.... இது ஒன்றே உலகம் சுகம் உய்யப் போதுமானதாகும்.

ஆணுக்கும், பெண்ணுக்கும் உள்ள பொருளாதார வித்தியாசம் தொலைந்த அன்றுதான், பெண்கள் தங்கள் பிறப்புரிமைகளாகிய சுதந்திரம், சமத்துவம், சகோதரத்துவம் ஆகியவற்றைப் பெறுவார்கள். அந்தப் பொருளாதார வித்தியாசம் ஒழியும் வரை பெண்களின் அடிமைத்தனம் நீங்கவே நீங்காது. மற்ற முயற்சிகள் யாவும் காலப் போக்கே. ஆதலின், சமதர்ம சமூகம் ஒன்றில்தான் பெண்கள் ஆணுடன் சரிசமத்துவம் பெற முடியும்.

சகலருக்கும் போதுமான சமத்துவ உணவு, ஆடை, வீடு கிடைக்க வேண்டுமானால் அவை சமதர்ம ஆட்சியில்தான் பெற முடியும். தொழிலாளர்களுக்கும், விவசாயிகளுக்கும் ஓய்வு நேரம் சமதர்மத்தில்தான் கிடைக்கும். சகலரும் உயர்தரக் கல்வியைப் பெற்று, மூட சாதி, மூட மத நம்பிக்கைகளிலிருந்து விடுபட வேண்டுமானால் அது சமதர்ம ஆட்சி மூலமாகத்தான் முடியும். பெண்கள் ஆணுடன் சமத்துவம் பெறவேண்டு மானால் சமதர்மத்தில்தான் அனுகூலப்படும். இனி வரும் சந்ததியாரை, பஞ்சத்திலிருந்தும், பட்டினியிலிருந்தும், நோயிலிருந்தும், அகால மரணத்திலிருந்தும் விடுவித்து, உலகை அழகு பெறச் செய்ய வேண்டுமானால் அது சமதர்மத்தில்தான் கூடிவரும். நமக்குப் பின்னால் உலகம் முழுதும், துவேச மோகமற்று, சண்டையற்று, போரற்று, உலக மக்கள் அன்புடன் கூடி வாழ வேண்டுமானாலும், சமதர்ம ராஜ்யம் மூலமாகத்தான் முடியும். உலகம் இப்பேற்றைப் பெறத் தற்காலத்தில் நிலவிவரும் கொடிய பொருளாதார வித்தியாசத்தினை முற்றிலும் மாற்றி, சமதர்ம ராஜ்யத்தை உருவாக்குதல் வேண்டும். தற்காலக் கொடிய திட்டத்தை மாற்றும் வகையையும், சமதர்ம ஆட்சியினை அமைக்கும் வழியையும், இனி எடுத்துக்காட்டுவோம்''

இப்படிப்பட்ட தெளிவான கருத்துக்களை அன்றைக்குத் தமிழகத்தில் மிக்க மனவுறுதியுடன் ஒருவர் வெளிப்படுத்தினாரென்றால் அது சிங்காரவேலர் மட்டுமே.

புரட்சி கீதம் இசைக்கப்போகும் சுதந்திர இந்தியாவின் கனவை நிறைவேற்ற இந்திய மக்களுக்கு கான்பூர் பொதுவுடைமை மாநாட்டில் அவர் விடுத்த வேண்டுகோள் :-

"தோழர்களே! இந்தியாவில் கம்யூனிஸ்டுகளாகிய நாம் குறிக்கோளாகக் கொள்ளவேண்டியது எது? எல்லோருக்கும் எளிய வாழ்க்கை, அன்றாட உணவு பற்றிய கவலையற்ற வாழ்வு, அகால மரணத்திலிருந்தும், உடல்நலக் கேட்டிலிருந்தும் விடுதலை பெற்ற வாழ்வு, அறியாமை நீங்கிய வாழ்வு ஆகியவைகளே. கம்யூனிசக் கொள்கைகளைப் படிப்படியாகவும் அமைதியாகவும் கடைப்பிடிப்பதால், இந்தியாவில் மக்களுக்குச் சிறந்த வாழ்க்கையைக் கொண்டுவர முடியும் எனக் கம்யூனிஸ்டுகளாகிய நாம் நம்புகிறோம். இந்தியாவின் எதிர்காலம் நம் கையிலுள்ளது. மிக உயர்ந்த இந்தியாவைக் காண, நாம் கனவு காண்கிறோம். ஆகையால் எளியோரை வலியோர் சுரண்டுவது, பட்டினி, நோய், சாவு ஆகியவைகளிலிருந்து விடுதலை பெற வேண்டுமென்ற நம் எண்ணங்களை, எத்தடையும் இடையூறுமின்றி வெளிப்படுத்த கலையுருவாக்கம் மிக உயர்ந்த பொருள்கள், விஞ்ஞானம், கலாச்சாரம் ஆகியவற்றை அனுபவிக்கும் உரிமையுள்ள தொழிலாளர் தம் புரட்சி கீதத்தை இசைக்கும் சுதந்திர இந்தியா பற்றிய கனவை நிறைவேற்ற முயல்வோம்"

சிந்தனைச் சிற்பி ம.சிங்காரவேலரின் கனவை நனவாக்க அவரது நினைவு நாளில் உறுதி ஏற்போம்.

***(சிங்காரவேலர் நினைவு நாள் பிப்ரவரி 11)***

# ஜனவரி... பிப்ரவரி... மார்ச்சுவரி...?!

குணாஜி

ஆளும் பா.ஜ.க. அரசின் முழுமையான கடைசி பட்ஜெட் இது, அதனால் மக்களின் எதிர்பார்ப்புகளை இது ஓரளவுக்காவது நிவர்த்தி செய்யும் என்று பிப்ரவரி ஒன்றாம் தேதி அதிகாலையிலிருந்தே ஊடகங்களில், செய்தியாளர்களும் வல்லுநர்களும் கூறிக்கொண் டிருந்தனர். இதனால் நடுத்தர மற்றும் ஏழை மக்களும், விவசாயிகளும், அரசு ஊழியர்கள், ஆசிரியர்கள் மற்றும் தொழிலாளர் வர்க்கத்தினரும் ஏதாவது சலுகைகள் பட்ஜெட்டில் இருக்கும் என்ற மிகுந்த எதிர்பார்ப்புடன் இருந்தனர். ஆனால் மத்திய நிதி அமைச்சர் அருண் ஜெட்லி தாக்கல் செயதுள்ள 2018-19 ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கை சாமான்ய மக்களின் எதிர் பார்ப்புகளை ஏமாற்றமடைய வைத்திருக்கிறது.



நிதி அமைச்சரும், பிரதம அமைச்சரும் கூறும் புள்ளி விவரங்கள் பொருளாதாரப் புலிகளுக்கு வேண்டுமானால் புரியலாம். ஆனால் பொதுமக்களுக்கு இவை எப்போதும் புரிவ தில்லை. கடந்த மூன்றரை ஆண்டுகளில் சில்லரை பண வீக்கம் 3.3 விழுக்காடு அளவுக்கு குறைந்துள்ளதாக நிதியமைச்சர் கூறுகிறார். ஆனால் பொருட்களின் விலையோ, சேவைத் துறையின் விலையோ சற்றும் குறையவில்லை என்பதை மக்கள் நேரடியாக அனுபவித்து வருகிறார்கள். கடந்த மூன்றரை ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி 7.4 சதவீதத்தை எட்டியுள்ளது என்றும் இது 8 சதவீதத்தை எட்டுவதில் அரசு உறுதியாக உள்ளது என்றும் நிதி அமைச்சர் சொல்கிறார். நிதியமைச்சர் சொல்வதைப் போல் கடந்த மூன்றரை ஆண்டுகளில் பொருளாதார வளர்ச்சி உயர்ந்துள்ளது என்றால் சாமான்ய மனிதனின் பொருளாதார நிலை கடந்த மூன்றரை ஆண்டுகளுக்கு முன் இருந்ததை விட இப்போது உயர்ந்திருக்க வேண்டும். கடந்த மூன்றரை ஆண்டுகளில் மட்டுமல்ல எப்போதுமே சாமான்ய மனிதன் கண்ட உயர்வெல்லாம் அத்தியாவசியப் பொருட்களின் விலையும், அடிக்கடி உயரும் பெட்ரோல் டீசல் விலையும்தான்.

பொருளாதார நிபுணர்களிடம் இது குறித்து கேட்டால் அவர்கள் மெலிதான புன்சிரிப்பு சிரித்து, அந்நிய நேரடி முதலீட்டு திட்டங்கள், வர்த்தகம் செய்வதற்கான எளிமையான விதிமுறைகள், பொருளாதார சீர்திருத்தங்கள் போன்ற மத்திய அரசின் நடவடிக்கைகளால் கார்ப்பரேட் பெரு நிறுவனங்களும், பன்னாட்டுப் பெரு நிறுவனங்களும் பெரிதும் பயன்பெறுவதன் மூலம் ஈட்டப்படும் லாபம்தான் பொருளாதார வளர்ச்சியாக காட்டப்படுகிறது என்கிறார்கள். இதன்மூலம் வேளாண்மைத் துறையும், வேளாண்மைத் துறைக்கு அடுத்ததாக வேலை வாய்ப்புகள் வழங்கும் சிறு மற்றும் குறு தொழில் நிறுவனங்களும் கடந்த மூன்றரை ஆண்டுகளாக சந்தித்து வரும் நெருக்கடிகளால் அவை முற்றிலுமாக அழிந்துவிடும் நிலைக்கு

தள்ளப்பட்டிருப்பதையம் அதற்கான தீர்வுகள் இந்த நிதிநிலை அறிக்கையில் இல்லை என்பதையும் அவர்கள் சுட்டிக்காட்டுகிறார்கள்.

ஆண்டுக்கு ஒரு கோடி பேருக்கு வேலை வாய்ப்புகள் வழங்கப்படும் என்று மோடி அவர்கள் பிரதமரானபோது அளித்த வாக்குறுதி நாற்திசைகளிலும் நாறி வருகிறது. நிதியமைச்சர் இதுவரையில் 70 லட்சம் வேலை வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதாக ஒரு புள்ளிவிவரம் கூறுவதாக ஒப்புதல் வாக்குமூலம் அளிக்கிறார். 70 லட்சம் வேலை வாய்ப்புகள் உருவாக்கப் பட்டதைக்கூட அவரால் உறுதியாகக் கூறமுடியவில்லை. மோடி அவர்களின் வேலை வாய்ப்பு வாக்குறுதி எதிர்மறையாகத்தான் மாறியிருக்கிறது. கடந்த மூன்றரை ஆண்டுகளில் ஜிஎஸ்டி மற்றும் பணமதிப்பு நீக்கம் போன்ற கொள்கைகளால் வேலை வாய்ப்புகளை இழந்தவர்கள் வேண்டுமானால் நிச்சயம் மூன்றரை கோடி பேருக்கு மேல் இருப்பார்கள். வேலை வாய்ப்புகளை இழந்தவர்களில் பெரும்பாலோர் தினக்கூலிகள், தற்காலிகத் தொழிலாளர்கள். இந்தக் கணக்கில் விவசாயிகள் சேர்க்கப்படவில்லை. 2022ஆம் ஆண்டுக்குள் விவசாயிகளின் வருவாய் இரட்டிப்பு ஆக்கப்படும் என்று கூறியுள்ள மோடி அவர்களின் அரசு அதற்கு வைத்துள்ள இலக்கு என்ன என்பதை இந்த நிதி நிலை அறிக்கையில் தெளிவுபடுத்தவில்லை என்பது மட்டுமல்ல விவசாயத் துறை கட்டமைப்புக்கு இந்த நிதி நிலை அறிக்கையில் 22000 கோடி ரூபாய் மட்டுமே ஒதுக்கி யிருப்பதும் நீர்ப்பாசனத்துக்காக 40000 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்படும் என்பதை அறிவிப் பாக மட்டுமே வெளியிட்டிருப்பதும் விவசாயிகளை விரக்தியில் ஆழ்த்தும் அறிவிப்புகள். எம்.எஸ். சுவாமிநாதன் குழு பரிந்துரை செய்துள்ளபடி விவசாய விளைபொருட்களுக்கு உற்பத்தி செலவுடன் 50 விழுக்காடு சேர்த்து வழங்கும் அறிவிப்பும், “மேக் இன் இந்தியா’’, “ஸ்டார்ட் அப் இந்தியா’’ திட்டங்களைப் போல நடைமுறைக்கு வராமலே போய்விடுமோ என்ற அச்ச உணர்வு நிச்சயம் ஒதுக்கிவிடப்படக்கூடியதல்ல. விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்ய வேண்டும் என்று விவசாயிகள் கோரிவரும் நிலையில் அதற்கு எதிர்மறையாக விவசாயக் கடன் அட்டைகள் விரிவாக்கப்படும் என்ற அறிவிப்பு “விவசாயத் தற்கொலைகள் ஒரு தொடர்கதை’’ என்பதை உறுதிபடுத்துவதாக உள்ளது.

நாட்டிலேயே வரி ஏய்ப்பு செய்யாத பிரிவினராக இருந்து வரும் அரசு ஊழியர்கள்தான் இந்த பட்ஜெட்டை மிகவும் எதிர்பார்த்து மோசமாக ஏமாந்து போனவர்களாக இருப்பார்கள். அரசு ஊழியர்களின் வருமான வரி உச்சவரம்பு ரூ.5 லட்சமாக உயர்த்தப்படும் என்ற மோடி அரசின் உறுதி மொழி “க்ளீன் இந்தியா’’ குப்பைத் தொட்டிக்குள் தூக்கி வீசப்பட்டுள்ளது அரசு ஊழியர்களுக்கு செய்யப்பட்டிருக்கும் இன்னொரு நம்பிக்கைத் துரோகமாகும். ஏற்கெனவே இருந்து, நீக்கப்பட்ட நிலையான கழிவு (standard deduction) திரும்ப வந்துள்ளது. ஆனாலும் அது ரூ.40000/- மட்டுமே. (இதனால் வருமான வரி செலுத்துவதில் ரூ.2000/- குறையும்) ஏற்கெனவே தற்கால விலையேற்றங்களை கொண்டு கணக்கிடும் போது இது அற்பமே. இங்கே விட்ட தொகையை கல்விக்கான செஸ் மூலம் (இதுவரை 2 சதமாக இருந்தது தற்போது 4 சதமாக உயர்த்தப்பட்டுள்ளது) எடுத்துக்கொண்டிருப்பதன் மூலம் அரசு ஊழியர்கள் வருமான வரி செலுத்துவதில் மிகுந்த சலுகை பெறுவார்கள் என்று பூதாகரமாக சிலாகிக்கப்பட்ட விஷயம் புஸ்வாணமாகிப் போயுள்ளது. மத்திய அரசு அலுவலகங்களிலும் மாநில அரசு அலுவலகங்கள் சிலவற்றிலும் மத்திய அரசின் வாக்குறுதியை மிகவும் நம்பியிருந்த சில பேர் கொஞ்ச நாட்களாகவே “ஜனவரி...பிப்ரவரி...அதன்பிறகு சொர்க்கபுரி!’’ என்று உற்சாகமாக பஞ்ச் டயலாக் பேசிக்கொண்டிருந்தார்கள். அவர்கள் இந்த நிதிநிலை அறிக்கைக்கு பிறகு மூர்ச்சையாகி விட்டார்கள். ஆனாலும் அதே இடங்களிலிருந்து இப்போது வேறு பஞ்ச் குரல்கள் கேட்கிறது, மிகவும் சோகமாக, சோர்வாக, “ஜனவரி... பிப்ரவரி... மார்ச்சுவரி...!’’ என்று. ஒன்று மட்டும் மீண்டும் மீண்டும் நிரூபிக்கப்பட்டுக் கொண்டே இருக்கிறது, ஆட்சியாளர்கள் அரசு ஊழியர்களை ஏழைகளாகவும், அடிமைகளாகவுமே வைத்திருக்கவே மிகவும் விரும்புகிறார்கள் என்பது.

❖

# போக்குவரத்து ஊழியர் போராட்டத்திற்கு ஆதரவாக அரசு ஊழியர் ஆர்ப்பாட்டம்

போக்குவரத்துக் கழகத்தில் பணியாற்றும் ஊழியர்களின் நியாயமான கோரிக்கைகளை வலியுறுத்தி போராட்டத்தில் ஈடுபட்டனர். அவர்களது பணத்தை எடுத்து அதில் போக்கு வரத்துத் துறையை நடத்தும் தமிழக அரசை கண்டித்தும், போக்குவரத்து ஊழியர்களுக்கு ஆதரவாக தமிழகம் முழுவதும் அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம் நடத்தும் படி மாநில மையம் விடுத்த அறைகூவலுக்கேற்ப ஆர்ப்பாட் டம் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக

## நாகை

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில மைய முடிவின்படி நாகை மாவட்டத்தின் அனைத்து வட்டத் தலைநகரில் பேருந்து கட்டண உயர்வைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் 24.01.18 அன்று மாலை நடைபெற்றது.

## வடசென்னை

24.1.2018 அன்று மாவட்டத்தில் 6 இடங்களில் நடைபெற்றது. ஆவடி-அம்பத்தூர் பகுதியில் இரண்டு இடங்களிலும், தங்கசாலை, குறளகம், சென்னை மாநகராட்சி, எழும்பூரில் தலா ஒரு இடத்திலும் நடைபெற்றது. 300க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.



## நாகை

நாகை வட்டாட்சியரகத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு வட்டத் தலைவர் சி.பாலசுப்பிரமணியன் தலைமை தாங்கினார். வட்டச் செயலாளர் எம்.தமிழ்வாணன் விளக்கவுரையாற்றினார்.

வருவாய்த் துறை அலுவலர் சங்க மாவட்டச் செயலாளர் து.இளவரசன், ஓய்வூதியர் சங்க மாவட்டச் செயலாளர் சொ.கிருஷ்ணமூர்த்தி,



நாகை தொழிற்சங்க கூட்டமைப்பு பொருளாளர் வி.பாலசுப்பிரமணியன் ஆகியோர் கண்டன வுரையாற்றினர். மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் நிறைவுரையாற்றினார். வட்ட இணைச் செயலாளர் எஸ்.மூர்த்தி நன்றி கூறினார்.

சீர்காழியில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு எல்.பிரேம்சந்தரும், தரங்கம்பாடி, செம்பனார் கோவில் ஆர்ப்பாட்டத்திற்கு சி.வாசுகி மற்றும்



செம்பனார்கோயில்

எம்.தட்சிணாமூர்த்தி ஆகியோரும், குத்தாலம் ஆர்ப்பாட்டத்திற்கு எம்.இராமச்சந்திரனும், மயிலாடுதுறை ஆர்ப்பாட்டத்திற்கு சி.குருபிரசாத்தும், கீழ்வேளூர் ஆர்ப்பாட்டத்திற்கு வி.மோகனும், வேதாரண்யம் ஆர்ப்பாட்டத்திற்கு எம்.ஜி.இராமமூர்த்தியும் தலைமை வகித்தனர். 300-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## சேலம்

மேட்டூர் வட்டக் கிளையில் தலைவர் கே.கலையரசு தலைமையில் நடைபெற்றது. து.சிங்கராயன் விளக்கவுரையாற்றினார். மாவட்டச் செயலாளர் இ.கோவிந்தராஜ் கண்டன உரையாற்றினார். மாநில துணைத் தலைவர் எஸ்.தமிழ்ச்செல்வி நிறைவுரையாற்றினார். சி.காமராஜ் நன்றி கூறினார். ❖

# துறைவாரி சங்க நிகழ்வுகள்

## வருவாய்த் துறை அலுவலர் சங்கம்

வருவாய்த் துறை அலுவலர்களுக்கு மேம்படுத்தப்பட்ட ஊதியம், தனி ஊதியம், வருவாய் துறையில் உள்ள 10 ஆயிரத்திற்கும் மேற்பட்ட காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும் உள்ளிட்ட 20 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி ஜனவரி 23 அன்று தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் மண்டல அளவிலான உண்ணாவிரதப் போராட்டம் திருவள்ளூரில் நடைபெற்றது. அதன் ஒரு பகுதியாக

### திருவள்ளூர்

திருவள்ளூர், காஞ்சிபுரம், வேலூர் ஆகிய மாவட்டங்களை சேர்ந்த மண்டல அளவிலான உண்ணாவிரத போராட்டம் திருவள்ளூர் மீரா திரையரங்கம் அருகில் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் மா.பாண்டியராசன், காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் ஏ.சுகுமார், வேலூர்



மாவட்டத் தலைவர் த.ராஜசேகர் ஆகியோர் தலைமை தாங்கினர். இதில் சங்கத்தின் மாவட்ட செயலாளர்கள் ஏ.மணிகண்டன் (திருவள்ளூர்), வி.ரவிக்குமார் (காஞ்சிபுரம்), எஸ்.ஏ.ராஜசேகர் (வேலூர்), பி.ஜெ.பிரகாஷ் (சென்னை), தமிழ்நாடு அரசு ஊழியர் சங்க மாநில பொதுச் செயலாளர் மு.அன்பரசு, மாவட்ட நிர்வாகிகள் ஜா.வே.அருள் டேனியேல், எஸ்.காந்திமதிநாதன், ஆர்.பாண்டுரங்கன், எம்.சத்தியநாதன் ஆகியோர் விளக்கவுரையாற்றினர். தமிழ்நாடு வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொருளாளர் கோ.இளங்கோவன் உண்ணாவிரதத்தை முடித்து வைத்து பேசினார். திருவள்ளூர் மாவட்ட பொருளாளர் சி.முனியசேகர் நன்றி கூறினார். இதில் ஏராளமான ஊழியர்கள் கலந்து கொண்டனர்.

### நாகப்பட்டிம்

மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டத் தலைவர் அ.சுந்தரம் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் து.இளவரசன் விளக்கவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டீ.அன்பழகன் வாழ்த்துரை வழங்கினார். மாநில செயலாளர் எம்.பி.ருகையன் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் சி.பிச்சைபிள்ளை நன்றி கூறினார். 20 பெண்கள் உட்பட 50-க்கும் மேற்பட்ட ஊழியர்கள் பங்கேற்றனர்.

### திருவள்ளூர்

பொன்னேரி அருகில் உள்ள காட்டூர் பகுதியில் மணல் கொள்ளையை தடுக்க முயன்ற காட்டூர் வருவாய் ஆய்வாளர் செல்வகுமாரை உருட்டு கட்டை, இரும்பு கம்பி ஆகியவற்றால் கொலை வெறியுடன் தாக்குதல் நடத்திய சமூக விரோதிகளை குண்டர் சட்டத்தின் கீழ் கைது செய்ய வேண்டும் என வலியுறுத்தி ஜனவரி 17 அன்று தமிழ்நாடு வருவாய்த்துறை அலுவலர் சங்கத்தின் சார்பில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்தப் போராட்டத்திற்கு சங்கத்தின் மாவட்ட தலைவர் மா.பாண்டியராசன், மாவட்ட செயலாளர் ஏ.மணிகண்டன், பொருளாளர் செ.முனியசேகர், ஆகியோர் கண்டன உரையாற்றினர். வருவாய்த் துறை அலுவலர் சங்கத்தின் மாநில பொருளாளர் கோ.இளங்கோவன் நிறைவுரையாற்றினார்.



**நாகை மாவட்டம்**

சீர்காழி வட்டாட்சியர் அலுவலகத்தில் இளநிலை வருவாய் ஆய்வாளராக பணியாற்றும் ஆர்.ராஜீவ்காந்தி, தாம் வசிக்கும் செம்பதனிருப்பு



கிராமத்தில் காணும் பொங்கலன்று நடைபெற்ற மோதலை தான் வருவாய்த்துறை ஊழியர் என்ற பதவியின் தன்மை உணர்ந்து சமரசம் செய்து விளக்கி வைத்துள்ளார். சட்டம் ஒழுங்கைக் காப்பதாகச் சொல்லி செம்பனார் கோயில் காவல் நிலைய ஆய்வாளர் ஆனந்த தாண்டவன், ராஜீவ்காந்தியை குற்றவாளியாக அதுவும் கொலை முயற்சி செய்த குற்றவாளியாக பொய் வழக்கு புனைந்து சிறையில் அடைத்துள்ளார்.

வருவாய்த் துறை அலுவலர் மீது செம்பனார்கோயில் சர்க்கிள் காவல் ஆய்வாளர் பொய் வழக்கு புனைந்ததை கண்டித்து சங்கத்தின் மாவட்ட மையம் சார்பில் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்டத் தலைவர் அ.சுந்தரம் தலைமையில் 18.01.18 அன்று மதியம் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர் ஏ.ட்டி.அன்பழகன் கண்டனவுரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் ப.அந்துவன் சேரல் நிறைவுரையாற்றினார். மாவட்டப் பொருளாளர் சி.பிச்சைபிள்ளை நன்றி கூறினார்.

## வள மைய பட்டதாரி ஆசிரியர்கள் முன்னேற்ற சங்கம்

சங்கத்தின் நாகப்பட்டினம் மாவட்ட மையம் சார்பில், நாகப்பட்டினம் அனைவருக்கும் கல்வித் திட்ட முதன்மைக் கல்வி அலுவலகம் முன்பு கண்டன ஆர்ப்பாட்டம் மாவட்டப் பொருளாளர் சி.சாரங்கபாணி தலைமையில் 18.01.18 அன்று மாலை நடைபெற்றது. செயற்குழு உறுப்பினர் எம்.வினித்குமார் வரவேற்புரையாற்றினார். அரசு ஊழியர் சங்க மாவட்டச் செயலாளர்



ஏ.ட்டி.அன்பழகன் சிறப்புரையாற்றினார். சங்கத்தின் மாவட்டத் தலைவர் ஞான.புகழேந்தி, எஸ்.திருசங்கு, அ.வரதராஜ பெருமாள் (கொள்ளிடம்), க.செல்வம், அ.தெய்வமோகன், சி.வீரராகவன் (மயிலாடுதுறை), ப.வடிவேல் (செம்பனார்கோயில்) மற்றும் மாவட்ட ஒருங்கிணைப்பாளர் டி.சித்ரா உள்ளிட்டோர் கண்டன உரையாற்றினர்.

நீதிமன்ற உத்தரவின்படியும் பணி நியமன ஆணையின்படியும் வள மைய ஆசிரியர் பயிற்றுனர்களை பள்ளிகளில் பட்டதாரி ஆசிரியர்களாக உடன் பணிமாறுதல் செய்ய வேண்டும் மற்றும் பணி மாறுதல் கலந்தாய்வை உடன் நடத்த வேண்டும் என்ற இரு கோரிக்கைகளை வலியுறுத்தி முழக்கங்கள் எழுப்பப்பட்டன. கோரிக்கைகள் நிறைவேற்றப்படாவிட்டால் விரைவில் பள்ளிக் கல்வித் துறை இயக்குனர் அலுவலகத்தில் முற்றுகைப் போராட்டம் நடத்தப்படும் என ஆர்பாட்டத்தில் நிர்வாகிகள் தெரிவித்தனர். 15 பெண்கள் உட்பட 70 ஆசிரியர் பயிற்றுனர்கள் ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

## வேளாண்மை துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கம்

சங்கத்தின் திருவள்ளூர் மாவட்ட பேரவை ஜனவரி 18 அன்று திருவள்ளூரில் உள்ள வேளாண்மை இணை இயக்குனர் அலுவலகத்தில் நடைபெற்றது. சங்கத்தின் மாநில செயற்குழு உறுப்பினர் நா.விஜயசாமுண்டீஸ்வரி தலைமை தாங்கினார். இதில் மாவட்ட செயலாளர் ஆர்.ரவிக்குமார் வரவேற்றார். நிகழ்ச்சியில் வேளாண்மைத் துறை அமைச்சுப் பணியாளர்கள் சங்கத்தின் மாநில தணிக்கையாளர் க.திவ்யா சிறப்புரையாற்றினார். புதிய மாவட்ட நிர்வாகிகள் தேர்வு செய்யப்பட்டனர்.

தலைவராக நா.விஜயசாமூண்டீஸ்வரி, செயலாளராக க.திவ்யா, பொருளாளராக ஜெ.ஜெகதீஸ்வரி, துணைத் தலைவர்களாக இரா.ரவிகுமார், எஸ்.அக்பர் அலி, தே.தேவன்

இணை செயலாளர்களாக எஸ்.ஆர்.புனிதா, பி.வி.உமாபதி, எஸ்.பிரகாஷ் மற்றும் மாநில செயற்குழு உறுப்பினராக இரா.ரவிக்குமார் ஆகியோர் தேர்வு செய்யப்பட்டனர்.

## தமிழ்நாடு ஊரக வளர்ச்சித் துறை அலுவலர் சங்கம்





சங்கத்தின் மாநிலசெயற்குழு கூட்டம் தருமபுரி அருகே உள்ள ஆர்.டி. நகர் சங்க அலுவலகத்தில் நடைபெற்றது. மாநிலத் தலைவர் எம்.சுப்பிரமணியன் தலைமை வகித்தார். மாநில பொதுச் செயலாளர் பி.கிருஷ்ணசாமி, மாநில செயலாளர் ஆறுமுகம், மாவட்டத் தலைவர் மணிவண்ணன், மாவட்டச் செயலாளர் இளங்குமரன் மாநில செயற்குழு உறுப்பினர்கள் சுருளிநாதன், விமலன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டு பேசினர்.

போக்குவரத்து தொழிலாளர் வேலை நிறுத்தத்திற்கு ஆதரவு தெரிவித்து அரசு ஊழியர் சங்கம் 8.1.2018 அன்று நடத்தும் ஆர்ப்பாட்டத்தில் பெருமளவில் பங்கேற்பது என முடிவெடுக்கப்பட்டது.

## தமிழ்நாடு கல்வித்துறை நிர்வாக அலுவலர்கள் சங்கம்



சங்கத்தின் கரூர் மாவட்ட மையத்தின் சார்பில் 05.01.2018 வெள்ளிக்கிழமையன்று, கரூர் மாவட்டத்தில் ஊழியர் விரோதப் போக்குடன் செயல்பட்டு, காரணமின்றி தாந்தோன்றித் தனமாக மாறுதல் ஆணைகளை அமைச்சுப் பணியாளர்களுக்கு வழங்கியும், பேச்சுவார்த் தைக்கு சென்ற சங்க நிர்வாகிகளை அவமரி யாதையாக பேசிய கரூர், முதன்மைக்கல்வி அலுவலர் து.கணேஷ்மூர்த்தியைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம் எழுச்சியோடு நடைபெற்றது.

சங்கத்தின் மாவட்டச் செயலாளர் கோ.இலட்சுமணன் வரவேற்புரை நிகழ்த்தினார். மாநிலப் பொதுச் செயலாளர் பொன்.ஜெயராம் கண்டன உரையாற்றினார். சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் சி.செல்வக்குமார், அரசு ஊழியர் சங்க மாவட்டத் தலைவர் மு.மகா விஷ்ணன் மாவட்டச் செயலாளர் கே.சக்திவேல், இதர துறைவாரி சங்க நிர்வாகிகள் வாழ்த்துரை வழங்கினர்.

தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கத்தின் மாநிலத் துணைத் தலைவர் மு.சுப்பிரமணியன் அவர்கள் சிறப்புரையாற்றினார். சங்கத்தின் மாவட்ட துணைத் தலைவர் ம.லெனின் நன்றி கூறினார். போக்குவரத்து தொழிலாளர்களின் வேலை நிறுத்தத்தால் பேருந்துகள் இயக்கப்படாத சூழ்நிலையிலும் ஆர்ப்பாட்டத்தில் 120க்கும் மேற்பட்ட ஊழியர்கள் கலந்துகொண்டனர். ❖

Printed and Published by M. ANBARASU on behalf of Tamil Nadu Government Employees Association, at No.48, New No.46, Car Street, Triplicane, Chennai 600005 and Printed at Chennai Offset Printers, 19/1 & 21/2, Kithabath Khan Bhagadur Street, Ellies Road, Anna Salai, Chennai 600002, Editor: M. SUBRAMANIAN . Phone: 28441286
E-mail: arasuoozhiyar@gmail.com